Jan Bdmé

V5 M0-20 19 May 1932

3L
MD211, N28KN
M32.5.20.
188968

KALANILAYAM தனிப்பிரதி விலை அணா மூன்று

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 5.] 1932 ஹு மே மீ 19உ [No. 20

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 381
2. குன்றுடையானும் மக்களும்
W.V. கோவிந்தசாமி ராஜு B.A.,L.T. 383
3. நம்மாழ்வார் வைபவம் (2-ம் பத்து 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 385
4. தமிழ்ப்பாடம்
நளவெண்பா - சுயம்வரகாண்டம் 386
5. ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் (வாரானைப்பருவம்.) கி. வெங்கடசாமி ரெட்டியார் 389
6. பழக்கமும் கல்வியும்
M. சோமசுந்தரம் பிள்ளை B.A., L.T. 390
7. பெனிடிக்ட் டி ஸ்பைபேனுஸா
T. R. இராஜகோபால் 391
8. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 3. களம் 1.)
ஷேக்ஸ்பியர் நாடகம் 392
9. அப்பர் (64 கலை—தர்க்கம்—அருத்தாபத்தி)
E. N. தணிகாசலமுதலியார் B.A. B.L. 394
10. கம்பராமாயணம் (சூர்ப்பணகைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 396
11. சொல்லூடாட்டம் 2. 398
12. வர்த்தமானம் 399

கலாநிலயம்

வித்தகமோ விதிவசமோ. 12.

வித்தகர்களாயினோரையும் வருத்தங்கள் பல வந்து சாராமற் றீராதென்பதைச் சிந்தனையினில் நாம் என்ஞான்றும் வைத்துக்கொளல் வேண்டும். ஆயினும் மனிதர்கள் வருந்துவதத்தனையும் வந்தடைந்த அவ்வருத்தங்களால் மாத்திரம் அல்லவே. வருத்தத்தின் வேகம், அதனை நாம் எவ்வகையில் ஏற்றுக்கொள்கின்றோம் என்பதையன்றோ பொறுத்திருக்கின்றது. புத்திரனை யிழப்பதனினும் மாபெருங் கொடுந்துயரம் வேறில்லை. புத்திரசோகப்பட்டவர்கள் தம் துயரமெல்லாம், ஒரேவகையதாயேனும் ஒரே அளவினதாயேனும் இருக்கின்றதோ. இத்தகைய இழவிற்கு இலக்காகிய பத்துப்பேரை நாம் தனித்தனி நோக்குவோமெனின், இவ்விழவு அவ்வொவ்வொருவருக்கும் வேறுவேறாகித் தோன்றுகின்ற தன்மை புலப்படும். "துன்பமே, நீ என்னை இன்னபடி செய்" என்று அவரவர், தம்பால் எய்துகின்ற துன்பத்திற்குச் சொல்லாமற்சொல்லி யிடுகின்ற உத்தரவின்படி யல்லது அத்துன்பமானது வேறெவ்விதத்திலும் விவகரிக்க ஆற்றல் பெற்றதில்லை. இனி, நாம் இன்புற்றிருந்த நாட்களில் என்னினைத்து என்செய்து எவ்வண்ணம் வாழ்ந்திருந்தோமோ அதனையே இவ்வுத்தரவின் வாசகம் பொருந்தியிருக்கும். ஒருவன் மிகமிக விழைந்து வேண்டிய நலன்களனைத்தையும் அவனுக்கு விதியானது தன்னொரு கையால் அளித்த அந்நாளே மறுகையால் அவன் மைந்தர் இருவரையும் பறித்துக்கொண்டு போய்விட்டதென வைத்துக்கொள்வோம். தனிச்சிறப்பெய்திய மனமாண்பு ஒன்றுமில்லாச் சாதாரண மனிதனேயாயின், அன்னான் அகத்துள் ஒளிக்கதிர் ஒன்றேனும் புகுவதின்றிப் பெரியதோர் இருளாற்றானே முற்றிலும் விழுங்கப்பெற்றவனாவான். எதிர்த்தொருசிறிதும் அவ்வருத்தத்தைப் பொருதலின்றித் தோற்று வீழ்ந்திடுவான். விதியுங்கூட, இவ்வளவு எளிதில் தான் அவன்மீது கொண்டவிவ் வெற்றியை எள்ளி, அவன் வாழ்க்கையத்தனையும் பிடிசாம்பரென எடுத்துக் காற்றில்தூற்றிவிட்டுப் போய்விடும். இந்தத் துன்பத்திற்குப்பிறகு அவனுடைய துர்க்குணங்களும் அற்பத்தனமுமே மேன்மேலும் விளங்கத்தலைப்படும். இன்பத்திற்குரியவைகளென்று கருதப்படும் நன்மைகளை நமக்கு அளிக்கின்ற விதியானது அதற்கீடாக நம்மிடத்தினின்றுஞ் சிலவற்றை வாங்கிக்கொண்டு போகின்றது. இன்புற்றிருந்த நாட்களில், நாம் அன்பும் அருளுமுடைய பெருந்தகை எண்ணங்களோடுவளர்ந்தோமோ, அல்லது செருக்கும் அவாவுமுடைய சிறுமையிற் குறுகினோமோ என்பதைச் சோதித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும். ஏனெனில், இன்புற்றிருந்த காலத்தில் நம்முடைய ஆன்மா கொடுத்துவைத்திருந்தவைகளையே நம் விதியானது, துன்பத்துடன் கொண்டு வந்து நமக்குத் திருப்பிக்கொடுத்துவிடுகின்றது. இது தான் நமக்கு விதிசெய்யும் எதிர்வரிசை. ஆதலின் அற்பவாழ்க்கையில் அமர்ந்திருந்தவர் தம் அற்பத்தனத்தையே விதியின் கையில் ஒப்புவித்திருந்தமை பற்றி, துன்பங்கள் பிளந்துவிட்ட புண்ணின் வழியாய்

மீண்டுமவ் வற்பத்தனத்தையே புகட்டப்பெற்று, முன்னிலும் பன்மடங்கு இழிந்தவராகின்றார். புத்திரனை இழந்த இவன், துன்பமுடன் சேர்ந்து ஓர் புதிய புன்மையைப் பெறுகின்றான்.

இதற்கெதிர், வித்தகர்க் கித்தகைய தீ விதி வாய்த்ததாயின், அவர்தம் தூய்மையே அந்தத் துன்பத்தால் மிகும். வேறு வேறு வகைகளில் இவர் ஆறலாமெனினும் நாடிய அமைதி ஒவ்வொன்றும் நன்மையின் தோற்றங்களாய்ச் சிறப்பெய்துகின்றது. சிறுத்தொண்டன், தன் மைந்தனை இழந்த நாள், "எம்மிறை ஈந்தானொரு மகவு, மீண்டும் கொண்டுபோயினன்; போகும் வழியில் அடியார் ஒருவர்தம் விழைவு நிறைவடையநேர்ந்ததே" என்ற எண்ணத்தால் பெருகியிருப்பான். சிபிச்சக்கரவர்த்தி தன் மைந்தனை இழக்க நேர்ந்திருப்பானாயின், "இனிவரும் புறவிற் கெதிர்த்துலை ஏறுதற்கென் வழித்தோன்றல் ஒருவன் இல்லையே" என்று ஏங்கு மளவிலேயே, மெலியோரை நலிவுசெய்யும் வலியோர் இனி இவ்வுலகில் இல்லாதவண்ணம் அருட்பெருங்கடவுள் யாவும் திருத்தி நனி இயற்றிவிட்டார் போலும்; ஆதலின் என்மரபுளார் இனிஇங்கு மிகையென்று என் மைந்தனைக் கொண்டுபோயிருப்பினுமிருக்கலாம். இனி தினிவாழி இவ்வுலகம்" என்றென்று பரிவுடன் துதிகள் செய்திருப்பான். "யான் அன்பு பூண்டிருந்த இம்மைந்தன்பால் இனிநான் அன்புசெலுத்தி அகமகிழ்தற்கியலாமற் போயினாலென்; இதுகாறும் யான் அன்பு கொள்ளாதவர்களை இனியேனும் எனது அன்பினகத்தே தழுவிக்கொள்ள யான் கற்றுத்திகழ்வான்வேண்டி இவ்விழவுதான் எனக்கு நிகழ்ந்தது போலும்" என்று சனகன்போன்றவர் சிந்தையுட் கொண்டிருப்பர்.

இவைகளெல்லாம் வெறும் வார்த்தைகளேயென்று மதித்தொரு மோசம்போகவேண்டா. உற்ற புண்களை மறைக்க முயல்கின்ற முயற்சியில் இரத்தமே அதிகம் பெருகுவதுபோல் இவ் வீண்வார்த்தைகளால் ஆறுதல் அடையநினைப்பதால் யாது பயன் என எண்ணி இகழ்ந்துவிடல் மிகப்பெரும் பிழைகளில் ஒன்றாக முடியும். அவ்வாறே இருப்பினுந்தான் என்? வெறும் வார்த்தைகள்தாம் ஆறுதல் அளிக்கின்றனவெனின் ஆறுதற்கு வேறோர் வகையும் இல்லாதிருப்பதைக் காட்டினும் இது சிறந்ததேயன்றோ! அதுவுமன்றி, இவையனைத்தும் வாய்க்கெளிய மாயங்களே என்று கொண்டக்கால், ஆன்மாவிற்கு உடைமையாய் எஞ்சவல்லது மாயை ஒன்றேதான் என்பதையும் ஒப்புக்கொளல்வேண்டுமே. எனின் மற்ற மாயைகளை மெய்யெனப் பாராட்டி விவகரிப்பவர் இதனைமாத்திரம் ஏற்றுக்கொள்ளாமல் இகழ்ந்தொதுங்குவது எவ்வாறு நியாயமாகும்? சிபிச்சக்கரவர்த்தியும் சிறுத்தொண்டநாயனாரும் சனகவேந்தனும் தம் புத்திரன் இருந்தவிடம் படித்தவிடம் படுத்தவிடங்கள் பாழாகிக்கிடப்பதைக் காணுந்தோறும், உயரிய எண்ணங்களால் தூய்மைப்படாத ஏனையோரைப்போன்றே, கட்டுக்கடங்காக் கடுந்துயரினின்று தப்பமாட்டாமல் தவிக்கவுந் தவிக்கலாம். பட்டினத்தடிகளுக்கு அவர் அன்னை அடிவயிற்றில் இட்டதோர் தீயின் வேகத்தை நாம் அறிவோம். விதனமென்பது வித்தகர்களை அடியுடன்விட்டு விலகிவிட்டதென்று எண்ணற்க. உணர்வின் நுண்மையும் எண்ணத்தின் பெருமையும் எவ்வளவு அழகியனவேனும் அவைகளுக் கில்லாதவோர் குணத்தைக் கொடுத்து மதித்தலாகாது. வித்தகத்தின் அணையையுங் கடந்து வழிகின்ற கண்ணீரும் உளது. வித்தகத்தாலும் தேற்றலாற்றா வேளைகளும் உள. ஆதலால், இறுதியாக இதனை இன்னொருமுறை கூறுவோம்—துன்பமென்பது என்றென்று மின்றியமையாததாதலின், துன்பமொன்றுஞ் சாரமல் தடுத்துவிடுவது ஒருபோதும் முடியாது; எனினும், நம்முடைய துன்பங்கள் நமக்கு எதனைக் கொணர்ந்து என்ன செய்விக்கின்றதென்பது முற்றிலும் நம் கைவசத்திலேயே இருக்கின்ற நிச்சயத்தை நினைத்துக்கொளல் வேண்டும். விதியின் வன்மையால் வந்தெய்தியது துன்பமாகலாம்; மற்று, அந்தத் துன்பத்தின் விளைவு எவ்வகைத்தாகின்றதென்பது விதியின் ஆற்றலிற்குள் அடங்குவதில்லை. வந்தடைந்த துன்பங்கள் நம்மைச் சுடச்சுட ஒளிரும் பொன்னேபோல் தூய்மைசெய்து மாற்றேற்றுகின்றதோ, அல்லது வாயும் மனமுஞ் செய்கையுங் கைத்துக் களிம்பேறிய அற்பர்களாக்கிவிடுகின்றதோ, என்பதை முடிவுசெய்து ஏற்றுக்கொள்ளும் முழு உரிமையுடையவர்கள் நாமேயா யிருக்கின்றோம்.

இந்த உரிமையிற் பெரியது நமக்கிருப்பவைகளில் யாதொன்றுமில்லை. துன்பத்திற்குக் காரணமாயிருப்பனவற்றைக் கண்ணிற் காண்கின்றோம்; மற்று, அத்துன்பத்தால் நாம் பெற்றுக்கொள்ளலாவதைத் தேர்ந்து கொள்ளக்கூடிய உரிமையோ நம் கண்களிற்குத் தோன்றாதென்பது உண்மையே. கண்ணுக்குத் தெரியாமையாலேயே அவ்வுரிமையை நாம் இகழ்ந்துவிடலாமோ! நம்மிலே நாம் கண்டு மதிக்கநிற்பனவும், நம்முடைய வாழ்க்கையைப் பெருமைப்படுத்தி உயர்த்துவனவும், மற்று நாம் புரியுந் தீமைகளுக்கு ஓர் வரம்பு வகுக்கும் உணர்வுகளுங்கூட, பகுத்தறிவின் இடுங்கிய கண்களால் பார்க்குங்கால் மிகச் சிறியனவாகத் தோன்றும். எனினும், ஒவ்வொருவனுந் தன்னுடைய வாழ்க்கைக்குத் தக்கதென்று ஏற்படுத்திக்கொள்ளும் தருமத்தை ஆள்கின்றவைகள் இவைகளே. நம்முடைய பகுத்தறிவினால் புறக்கணிக்கப்பெறும் உண்மைகள் பலவற்றை நாம் வழிபடுவதில்லையெனின் நம்முடைய வாழ்க்கை பின்னர்ச் சிறிதேனுந் தாங்கத்தகுந்ததாகாது. கயவர்களிற் கடையாயினோரும் தமக்கென்று ஏதோ வோர் தருமத்தை நிறுவிக்கொண்டு அதற்கு அடங்கி நடக்கின்றார்களென்பதில் ஐயமில்லை. "கொல்கின்றே னாயினும், நான் திருடுவதில்லையே" என்பான் கொலைஞன். திருடுபவன், திருடுகின்றானேயொழியத் தான் நம்பிக்கைத்துரோகஞ் செய்வதில்லை என்பான். வஞ்சகனும் தன் தம்பியை வஞ்சிப்பதில்லை என்னும் விரதமுடையவனா யிருப்பான். இப்படியே ஒவ்வொருவனும் ஏதோ வொரு தருமத்தைத் தனக்குத் தஞ்சமாக வைத்திருக்கவேண்டுவதே கடன். துன்பத்தால் தூய்மையடைந்து உயர்வதும், அல்லது நிலைகுலைந்து அற்பமாவதும், அவரவர்க்கென் றமைத்துக்கொண்ட இத் தருமத்தின் தன்மையைப் பொருந்தியதாய் முடியும்.

குன்றுடையானும் மக்களும்

இரண்டாம் புத்தகம் — 2. அண்ணன்மார் கலியாணம்

[367-வது பக்கத் தொடர்ச்சி]

இதுவரையிலும் பாய்ச்சலூர்த் தம்பிமார்கள் சும்மா விருந்தார்களோ? இல்லை. குன்றுடையான் குடி நாளுக்குநாள் பெருகிவருவதைக் கண்டு பொறாமையுற்று, அவனுக்கு வீரத்தன்மைவாய்ந்த மக்கள் உண்டாயிருத்தலையும் நோக்கி வெருண்டு, பாய்ச்சலூரார் உறையூருக்குச்சென்று சோழர்களைக்கண்டு குன்றுடையான் மக்கள் தங்களை யடித்தார்கள் என்றும் சோழர்களை யிகழ்ந்தார்கள் என்றும் கோட்சொல்லி, தங்களை அப்பாதகர்களினிடமிருந்து காப்பாற்றுதல் வேண்டும் என்று குறையிரந்தனர். இதுகேட்ட சோழர்கள், 'குன்றுடையான் மக்கள் கடந்த ஆறுமாதங்களாய்ப் பகுதி கட்டவும் இல்லை; எங்களை வந்து காணவும் இல்லை; உலுப்பை செலுத்தவும் இல்லை. அவர்களுக்குத் தகுந்த தண்டனை விதிக்கின்றோம்' என்று உறுதிகூறிப் பங்காளிகளை அனுப்பிவிட்டு, மந்திரியை அழைப்பித்து ஆலோசித்தார்கள்.

சோழரில் ஒருவன், சிற்றாலைப்பட்டணத்திற்கு ஒரு படையை யனுப்பிக் குன்றுடையான் மக்களைக் கைப்பிடியாய்க் கொண்டுவரச் செய்து தக்கபடி தண்டித்தல் வேண்டுமென்றான். மற்றிருவர் அவர்களை உறையூருக்கு வரும்படி உத்தரவனுப்பி, வந்தபின் சிக்ஷிக்க வேண்டும் என்றனர். மந்திரியோ, அவர்கள் வரத்தாற் பிறந்த வீரர்கள் என்றும், அவர்களோடு பகைத்துக் கொள்ளுதல் இராசதந்திரம் ஆகாதென்றும், அவர்களை மரியாதையாக வரவேற்றுப் பின் உசிதமானால் தண்டிக்கலாமென்றும், அவர்களை அழைத்துவரும்படி இளவரசனான சிறு சோழனை அனுப்புதல் நலமென்றும் ஆலோசனை கூறினான். அரசர்களும் மந்திரிசொன்னதை யேற்றுக்கொண்டு சிறுசோழனைக் கூப்பிட்டு அண்ணன்மாரை அழைத்து வருமாறு உத்தரவுகொடுத்தனுப்பினார்கள். சிறுசோழனும் அன்றே சிவிகையேறிச் சிறுபடைசூழ்ந்துவரச் சிற்றாலைப்பட்டணத்துக்கு வழிக்கொண்டான்.

மறுநாட்காலையில் எட்டு நாழிகைக்குச் சிறுசோழன் வேளாண்குளத்தைக் கடந்து சிற்றாலைப்பட்டணத்தை நோக்கி வருகையில், தூரத்தே அண்ணன்மார் சிலம்பக்கூடத்தில் படைபயிலுதலால் உண்டான ஓசையைக் கேட்டுத் திடுக்கிட்டான். வரும்வழியில் அண்ணன்மாரைப் பற்றிச் சனங்கள் சொன்னவையும் அவனுக்குத் திகிலை விளைத்தன. அன்று நல்ல வெய்யில் காய்ந்தமையாலும் சிறுசோழனுக்குத் தாகவிடாய் அதிகரித்தமையாலும் அவன் வேளாண்குளத்திற்குத் திரும்பிச்சென்று தாகசாந்தி செய்துகொண்டு அங்குள்ள வொரு தோப்பிலே கூடாரமடிப்பித்துத் தங்கினான்.

அப்பொழுது தங்காளின் அரண்மனையிலிருந்து தாதியர் நீர் மொண்டுபோக அக்குளத்துக்கு வந்தனர். சிறுசோழன் அவர்களைத்தன்பால் அழைப்பித்து, 'அம்மா, நீங்கள் யார்?' என்றான்.

தாதியர், 'ஐயா, நாங்கள் தங்காளுடைய தாதியர்கள்' என்றனர்.

சிறுசோழன், 'தங்காள் என்பவள் யாவள்? என வினவினான்.

தாதியர், 'ஐயா, தங்காளைப்பற்றித் தாங்கள் கேட்டதில்லையோ? காலஞ்சென்ற குன்றுடையாக் கவுண்டன் மகள். அண்ணன்மாருடைய அருமைத்தங்கை," என்று மறுமொழி புகன்றனர்.

சிறுசோழன், 'அப்படியா? நல்லது. அங்கே தெரிகின்ற இரண்டு அரண்மனைகளும் யாருடையவை?' என்றான்.

தாதியர், 'ஐயா, பெரியது தங்காளுடையது. சிறியது அண்ணன்மாருடையது," என்று சொல்லினர்.

சிறுசோழன், 'அறிந்தேன்; பூமியதிரும்படிகேட்கிற இந்த ஓசை யாது? எனக் கேட்டனன்.

தாதியர், 'ஐயா அண்ணன்மார் நாடோறும் மத்தியானமாகுமளவும் சிலம்பப்பயிற்சி செய்வதுவழக்கம். இது அவர்கள் சிலம்பத்தொனி,' என்று விடைகூறி, 'தாங்கள் யாரென்பதையும், தாங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்களென்பதையும் நாங்கள் அறிந்துகொள்ளலாமோ?' என்று பணிவோடு கேட்டனர்.

சிறுசோழன், 'நான் சோழமன்னனுடைய பிள்ளை. சோழர் அண்ணன்மாரைக் கைப்பிடியாய் அழைத்துவரச் சொன்னார்கள்' என்றான்.

அதுகேட்டுத் தாதியர் வாய்புதைத்து, 'ஐயா, அண்ணன்மாரிடத்தில் கைப்பிடியாய் அழைத்துவரச் சொன்னார்கள் என்று சொல்வீர்களானால் தாங்கள் உயிரோடு ஊருக்குத் திரும்பமாட்டீர்கள். அண்ணன்மாருடைய செய்திகளைத் தாங்கள் அறியீர்கள்போலும்," என்று சொல்லி, நேரம் ஆயிற்றென்று நீர்க்குடங்களோடு தங்காள் அரண்மனையை நோக்கிச் சென்றனர்.

சிறுசோழன் அத்தாதியர்கள் சென்று தான்உரைத்ததை அண்ணன்மாருக்கு அறிவிப்பார்கள் என்றும் அதனால் தனக்குக்கேடுவிளையுமென்றும் அஞ்சி, அக்கணமேதன் படையோடு உறையூரைநோக்கிப் புறப்பட்டான். தாதியர்கள் அவர் போவதைக்கண்டு விரைந்து சென்று நடந்தவற்றைத் தங்காளுக்கு விண்ணப்பித்தனர். தங்கை சிறுசோழனைத் திரும்பிப் போகாமற்றடுத்து அரண்மனைக்கு அழைத்துவந்து உபசரிக்குமாறு பொன்னருக்கு ஓலையெழுதி யனுப்பினாள். பொன்னரும் ஊரை யலங்கரிக்கும்படி உத்தரவிட்டு, கார்மேகம் ஏறிக் கடுகிச்சென்று, சிறுசோழனைத் தடுத்துத் தம் அரண்மனைக்கு அழைத்துவந்து விருந்துசெய்வித்து, கொலுவிலிருத்திச் சந்தனமும் பாக்கிலையும் சகலருக்கும் ஈந்தார். அன்று மாலையில் பொன்னர் தங்காளிடத்து விடைபெற்றுச் சிறுசோழனோடு உறையூருக்குப் புறப்பட்டார்.

போகிறவழியிலே அரசிளங்குமரனும்பொன்னரும் குதிரைப்பந்தயமிட்டும் வாட்போர் செய்தும் ஒருவர்திறனை யொருவர் அறிந்து நகைத்து விளையாடிச் சென்றனர்.

அண்ணன் உறையூருக்குப் போனதைத் தம்பி சங்கர் அறியான். அன்று அவன் வீரமலைக்கு வேட்டைக்குப் போயிருந்தான்.

பெரியண்ணன் உறையூரை யடைந்து சோழர்கள் முன்னிலையில் நின்றாரேயன்றி அவர்களைக் கும்பிடவில்லை. ஆகையினால் சோழர்கள் சினந்து அவருக்கு விலங்குபூட்டி எட்டாங் கொட்டறையிலிட்டுப் பிடரியில் கல்லைவைத்துச் சுடுமணலைக் காலின்கீழ்ப் பரப்பும்படி உத்தரவிட்டனர். மூன்றுநாள் ஆறுபொழுது பெரியண்ணன் நிமிர்ந்துநிற்காமலும் உட்காராமலும் அன்னபானமில்லாமலும் அல்லற்பட்டுத் தன் தங்கையைநினைந்து, 'அம்மா, சோழர்கள் என்னை வஞ்சித்து வதைக்கிறார்கள்' என்று சொல்லிப் புலம்பினார்..

அன்னவடிப் பொன்னூஞ்சலிலே சாய்ந்து ஆடிக்கொண்டிருந்த தங்காள் கண்ணயர்ந்து சோழர் அரண்மனையில் தன் அண்ணன் படும்பாட்டையும் அவன் புலம்புவதையும் கனவிற்கண்டு, 'ஆ' வென்றலறியெழுந்து, 'சோழர்களால் பெரியண்ணனுக்கு இடர் விளைந்தது. நீ உடனே குதிரைமேற் சென்று அண்ணனை விடுவி' என்று ஓர் சுருளோலை யெழுதிச் சின்னண்ணனுக்குத் தன் தாதியரிடம் கொடுத்தனுப்பினாள். தாதியர் கடுகிச்சென்று அண்ணன்மார் வீட்டையடைந்து மைத்துனனோடுசொக்கட்டான்விளையாடும் சங்கரிடம் ஓலையைக் கொடுத்தார்கள்.

ஓலையைப் படித்தமாத்திரத்தில் சீறுபுலிச் சின்னண்ணனுக்குக் கோபமூளவே, சாம்பானைக் கூவிப் படைதிரட்டக் கட்டளையிட்டு வாளெடுத்துப் புள்ளிக்குதிரையேறிப் பாய்ந்தான். சாம்பானும் ஈட்டிக் குதிரைப் படையொன்றைத் திரட்டி விடாமலவனைப் பின்தொடர்ந்தான். குதிரைகளின் காலோசை கேட்டதேயன்றி அவற்றையும் அவற்றை யூர்வோரையும் முற்றப்பார்த்தோர் ஒருவரும் இல்லை. குதிரைகள் அத்துணைவிரைவாகச் சென்றன.

வந்துவிட்டனர் சோழர். அரண்மனை வாசலுக்குதம் காவலாளர்களும் சங்கரும் கைகலந்தார்கள். வாயில் காப்போர்களுடைய தலைகள் உருண்டன. சாம்பான் இருப்புலக்கைக்குப் பயந்து சேவகர்கள் ஓட்டமெடுத்தார்கள். வாசலில் இரத்தம்பெருக்கெடுத் தோடிற்று.

இதனிடையில் சோழர்மூவரும் அரண்மனைக் கதவுகளை மூடித் தாழிட்டு, ஓரிடத்தில் நின்று, இன்னது செய்வதென்று அறியாமல் ஒருவரையொருவர் பார்த்துக் கைபிசைந்தனர். அந்தத்தருணத்தில் வயது சென்ற அவர்களுடைய அன்னை அவர்கள் பக்கலுக்கு ஓடிவந்து, 'மக்களே, பெரியவனைக் கொட்டறையிற் போடாதேயுங்கள் என்று கூறினேன். நீங்கள் கேட்கவில்லை. சங்கர் வந்துவிட்டான். அவன் சும்மாபோகான். இப்பொழுதாயினும் நான் சொல்கின்றபடி செய்யுங்கள்: பெரியவனை விடுதலைசெய்து உபசரியுங்கள். பிழைக்கவழி யிதுவொன்றேதான், என்றுகூறினாள். சோழர் அது நல்ல வுபாயம் என்றுணர்ந்து, ஓடிப்போய்ப் பொன்னருக்கு இட்டிருந்தவிலங்கைத் தறிப்பித்து, அவருக்கு விலையுயர்ந்த ஆடையாபரணங்களையணிவித்துப் பொன்முடி சூட்டி, சந்தனமும் வெற்றிலைபாக்கும் அளித்து, 'நாங்கள் செய்ததை மறந்து எங்களை மன்னிப்பாயாக. இனிமேல் நாம் ஒருவர்க்கொருவர் துணையாய் இருப்போம். உன் தம்பி இங்கே வந்திருக்கின்றான். அவனைச் சமாதானப்படுத்து? என்றுசொல்லி அவரைக் கைபிடித்து வேண்டிக்கொண்டனர். பொன்னர் தன் தம்பியை நோக்கிச் சென்றார். சோழர் மேன்மாடி யேறிநின்று பார்த்தனர்.

இதற்குள் சங்கரும் சாம்பானும் அரண்மனையின் கதவை யுடைக்கத் தலைப்பட்டனர். அப்பொழுது கதவைத்திறந்துகொண்டு பொன்னர் வாசற்படியிற் கால் வைத்தார். அவரைக் காண்டலும் தம்பி, 'சோழர்தம் பேச்சைக் கேட்டு இறக்கவந்தாயா, அண்ணா!" என்று சொல்லிக் கோபத்தாற் கலகலவென்று சிரித்தான்.

பொன்னர், 'இல்லை, இல்லை, தம்பி! சோழர்கள் என்னை இங்கு அழைப்பித்து முடிசூட்டினார்கள். இதோ, முடியைப் பார்' என்றார்.

அதுகேட்டுச் சங்கர், 'பொய்சொல்லாதே, அண்ணா. தங்கை சொல்தவறாது. உனக்கு இடர்விளைந்தது என்று சொன்னாளே' என்றனன்.

பொன்னர், தம்பியின் கையைப்பற்றி, 'தங்கை சொன்னதும்உண்மையே. கடந்தமூன்றுநாட்களாய்க் குளிரும் காய்ச்சலும் தலைவலியும் என்னை அதிகமும் வருத்தின; இன்று உடம்பு குணப்பட்டது. ஊருக்குப் போகவேண்டும் என்று எண்ணி அரசர்களிடம் விடைபெற்றுப் புறப்படுகிற வேளையில் நீயும் வந்தாய். வீணாகக் கோபிப்பதில் என்ன பயன் ?' என்று சொன்னார்.

அண்ணன் வார்த்தையைக் கேட்டுச் சங்கர் அமைதியுற்று, தன்னுடைய குதிரைப்படையைத் திருப்பி ஊருக்கு அனுப்பிவிட்டு அண்ணன்பால் வந்தான்.

சமயம் பார்த்திருந்த சோழர்களும் மாடியினின்றும் கீழே யிறங்கிவந்து, சங்கரை வரவேற்று, அண்ணன்மாரைத் தக்க ஆசனங்களில் உட்காரவைத்து, மந்திரி பிரதானிகளை அழைப்பித்து, அவர்கள் முன்னிலையில் அண்ணன்மாருக்குத் தங்கத்தட்டில் தாம்பூலமும் சந்தனமும் பூவும் வழங்கிப் பெரிதும் உபசரித்தார்கள். பின்பு சோழரில் மூத்தோர் அவர்களைப் பார்த்து, "உங்களுடைய தகப்பனார் எங்களுக்கு உற்ற நண்பர். அவர் வயிற்றில் வீரர்களாகிய நீங்கள் பிறந்ததை நாங்கள் கேள்வியுற்றுக் களிப்புற்றோம். ஆபத்து வந்தால் நாம் ஒருவர்க்கொருவர் உதவிபுரிந்துகொள்ளல் வேண்டும். இனிமேல் நீங்கள் ஆள்கிற நாட்டிற்குப் பகுதி செலுத்தவேண்டியதில்லை. எங்களுடைய சிற்றரசர்களாயிருந்து அரசுபுரியுங்கள்; உங்கள் நட்பே எங்களுக்குப்போதும்" என்றார். அண்ணன்மாரும் சோழருடைய வேண்டுகோளுக்கு இயைந்து, தக்கவாறு பதிலளித்து, விடைபெற்றுத் தம் வளநாட்டிற்குத் திரும்பினர்.

பொன்வளநாட்டில் பருவத்தில் மழைபெய்ய நாடு செழிப்புற்றது. அண்ணன்மார் ஆண்கூலி ஆறுவள்ளமும் பெண்கூலி நாலு வள்ளமும் அளந்து, தமக்குக் கீழ்ப்பட்டோர் கவலையின்றி வாழுமாறு அரசாண்டனர். அவர்களுக்கு ஈடுமில்லை, எதிருமில்லை; இவ்வாறு சிலநாட்கள் சென்றன.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

[368-வது பக்கத் தொடர்ச்சி]

2-ம் பத்து—10-ம் தசகம்.

1-ம் பாசுரம்.

கிளரொளி யிளமை கெடுவதன் முன்னம்
வளரொளி மாயோன் மருவிய கோயில்
வளரிளம் பொழில்சூழ் மாலிருஞ் சோலைத்
தளர்வில ராகிச் சார்வது சதிரே.

அவதாரிகை:—சென்ற தசகத்தில் தாம் செய்யும் வழிபாடுகளை ஏற்றுக்கொள்ள "வாராய்" என்று பகவானை விளித்தவர், இந்தப் பாசுரத்தில் திருமாலிருஞ்சோலை மலையை அழகுற வர்ணித்து அதனில் கோயில்கொள்ளும் பகவானை இளமையிலேயே சென்று சாருங்கோளென்று உலகத்தாருக்கு உபதேசம் செய்வதற்கு என்ன காரணமென்றால்—பகவான், இவர் வேண்டுகோளுக்கு இணங்கித் திருமலையில் அடிமைக் கைங்கரியங்களை ஏற்க ஸித்தமாய் வீற்றிருப்பாராகி ஸேவைஸாதிக்கவும் அந்தத் திருப்பதியை யநுபவித்து, அங்கு எம்பெருமான் எல்லாருக்கும் பிராப்பியனென்று ஹிதம் கூறுகிறார்.

நாளுக்குநாள் பக்தர்கள் கண்களுக்குத் தேஜஸுமிகுந்து சேவைஸாதிக்கும் எம்பெருமான் திவ்விய ஸ்தானமாகக் கொண்டிருக்கின்றதிருமாலிருஞ்சோலை மலை அதிசீதளமானசோலைகளால் சூழப்பட்டு விளங்குகிறது. உங்களுடைய கிலேசமெல்லாந் தீரும்படி உங்களுக்குக் காயகரணப்படுத்துமா றிருக்கையிலேயே சென்று பிராப்பியமாக அவனை அடையுங்கோள். இதுவே நீங்கள் செய்யக்கூடிய சாதுர்யமான காரியம். இதைவிடச் சீரிய பலன் கிடைக்கும் ஹேது இல்லை.

குறிப்புகள்:—"மாயோன்" - ஆச்சரிய பூதன். பண்டைக் காலமுதல் திருமாலின் திருநாமம். மருவிய - நித்தியவாஸம் செய்யப்பட்ட.

2-ம் பாசுரம்.

சதிரிள மடவார் தாழ்ச்சியை மதியா
ததிர்குரல் சங்கத் தழகர்தங் கோயின்
மதிதவழ் குடுமி மாலிருஞ் சோலை
பதியது வேத்தி யெழுவது பயனே.

வாய்ச்சொல் சாதுரியம் பொருந்திய இளம் ஸ்திரீகளின் வசியத்தை மதியாது பிரதிகூலர் ஹிருதயத்தைப் பிளக்கும் தொனியை உடைத்தான பாஞ்சஜன்னிய திவ்விய சங்கை ஏந்துவதாலே வெகு அழகுடையவனும், அனுதலேயே "அழகர்" என்று திருநாமமுடையவனுமாகிய எம்பெருமானுக்குக் கோயிலாய், சந்திர மண்டலத்தாலே அலங்கரிக்கப்பட்ட சிகரங்களையுடைத்தான திருமாலிருஞ்சோலை பதியை ஏத்துங்கோள்; இதுவே பரமப்பிரயோஜனம்-

குறிப்புக்கள்:—குடுமி-மலையின் சிகரம்(குடுமி ஸ்தானம்) குரலதிர்-அதிர் குரல். பகவான் தன் பாஞ்சஜந்நியம் என்ற சங்கினைத் தொனிசெய்தால் அவனுடைய விரோதிகளின் ஹிருதயங்கள் பிளக்கும் என்பது ஆறாயிரப்படிகாரர் உரை. இதற்குக் கமகம், பின் வருமாறு:—யுதிஷ்டரர் அசுவமேதயாகம் புரிந்தபோது துரியோதனன் அதற்குஉதவிபுரியச்சென்றிருந்தான். யாகம் முடிந்து திரும்பிவந்தபோது தகப்பனான திருதராஷ்டிரன் யாகத்தின் சீர்மைபெருமைகளைப்பற்றிப் பிள்ளையை வினவினான். கர்ணன் திரவிய சாலையிலும் பண்டகசாலையிலும் பொருள்கள் எடுத்து வழங்கினதைப்பற்றியும்பாண்டவர்கள் பிராமணர்களுக்கு அமுதுசெய்வித்து உபசரித்ததையும் பலவாறு புகழ்ந்து சொல்ல, ஸ்ரீ கிருஷ்ணபகவான் என்னென்ன கடமைகளைப்பூண்டாரென்றுதகப்பன்வினவினான். அதற்குப் பிள்ளை, திரள்திரளாக யாகத்துக்கு வந்து கூடிய பிராமணர்களைப் போஜனம்விளம்பிக் கொடுக்கச்சித்தமானவுடன் அவர்களை உண்டிக்குக் கூப்பிட்டு அழைத்துவரத் தன்னைக் கிருஷ்ணபகவான் ஏற்படுத்திக்கொண்டார் என்றான். ஆறுகளிலும் குளங்களிலும் ஆச்ரமங்களிலும் அங்கும் இங்கும் பிராமணர்கள் பரவி உலாவினவர்களைச் சுற்றிப்போய் எப்படி ஸ்ரீ கிருஷ்ணபகவான் அழைத்து வந்தார். சிற்சிலர் தவறிப் போவார்களே இந்தக்கடமை சுமைதலைக்குஆள்படுத்துமே. எல்லாரையும் ஒருங்குசேர்ப்பது கடினமான நிர்வாகமாயிற்றே. எவ்வண்ணம் நிறைவேறியது?" என்று தகப்பன் மேலும் உசாவ, துரியோதனன், "அப்பா நான் என்ன சொல்வோன். கிருஷ்ணன் தன் சங்கை வாயில் வைத்து ஊதினான். காததூரத்தி லிருந்தவர்களும் தொனிகேட்டு விடுதிக்கு உண்ண வந்தார்கள். அத்தொனி எனக்குமாத்திரம் கேட்கும்போது என் இருதயத்தைப் பிளந்ததுபோன் றிருந்தது" என்றான். பிராமணர்களோ தொனிகேட்டதும் உற்சாகங்கொண்டு இதுவல்லவோ நிர்வாகம்; ஒருவரும் விடாமல் எல்லாருக்கும் அறிவிக்க என்ன சூழ்ச்சி கிருஷ்ணன் செய்துவிட்டானென்று வியந்து போஜனசாலைக்கு நீ முன் நான் முன் என்று எழுந்தருளினார்கள்.

3-ம் பாசுரம்.

பயனல்ல செய்து பயனில்லை நெஞ்சே
புயன்மழை வண்ணர் புரிந்துறை கோயில்
மயன்மிகு பொழில்சூழ் மாலிருஞ் சோலை
அயன்மலை யடைவ ததுக ருமமே.

குறிப்புக்கள்:-புரிந்து-எம்பெருமான் ஆச்ரிதர்பக்கலிலுள்ள ஆதரவினால் தூண்டப்பட்டுத்தன்னைஸேவித்து உய்யும்பொருட்டு ஆத்மாதானம் செய்கிறான். அயன்மலை - இதுபோல் வேறொரு மலை இல்லை என்று திருவுள்ளம். கருமமே-"பயனில்லாத கர்மங்களை ஒழிக்க" வென்றல்லவோ புத்திமதி அளித்தார். மலையையடைவதே பயன்கொடுக்கும் ஸத்கர்மமென்றாகிறது.

4-ம் பாசுரம்.

கருமவன் பாசம் கழித்துழன் றுய்யவே
பெருமலை யெடுத்தான் பீடுறை கோயில்
வருமழை தழுவு மாலிருஞ் சோலை
திருமலை யதுவே யடைவது திறமே.

குறிப்புக்கள்:—கருமம் வன்பாசம்-கர்மமாகிற திடமான பாசம் (பாபப்பயன்.) பீடு - பெருமை. திறம் - சீரிய உபாயம்.

எம்பெருமான் திருவடியை யடைந்து பற்றுவதே லகத்தாருக்கு உசிதமும் கடைமையும் சீர்மையும் ருேன்று உபதேசித்தவர் தம்முடைய அநுஷ்டாங் த்தில் கைங்கரியத்தில் இழிந்தாரா என்ற கேள்வி ரக்கூடும். அதற்கு இப்பாசுரம் விடையாம். தன் நெஞ்சை விளித்துத் திருமாலிருஞ் சோலையை நீ டாதே பற்றி ஆசரியத்திரு வென்று கற்பிக்கின்றார்.

உரை:—நெஞ்சே, புருஷார்த்தமில்லாத செயல்க ச் செய்யாது ஒழி. ஆசிரதர்க்குத் தன்னைப் புஜிக்கக் காடுத்துக்கொண்டு அடிமைத் தொண்டுகளை ஏற்கத் ான் வந்துறைகின்ற சீதளமான திருமலையை யடை கவே அடிமை செய்கைக்கு உபாயம்" கோவர்த்தன லையை எடுத்துப் பசுக்களையும் கோபாலர்களையும் ாதுகாத்தவன் நம்முடைய மனதின் சந்தாபங்களை ல்லாம் போக்குவான்.

5-ம் பாசுரம்.

திறமுடை வலத்தாற் றீவினை பெருக்கா
தறமுடை யாழிப் படையவன் கோயில்
மறுவில்வண் சுனைசூழ் மாலிருஞ் சோலைப்
புறமலைச் சாரப் போவது கிறியே.

திருட்டெண்ணம் வஞ்சனை முதலிய உபாயங்க ால் கொரமான கருமங்களைப் பெருக்காது தரு மே செய்ய முயல்கின்ற திருவாழியைத் திவ்விய யுதமாக வுடையவனது, எங்குநீர்வளமுள்ள சுனை கள் நிறைந்த மாலிருஞ்சோலையினுடைய புறமலையை ஆச்ரிதமாகச் சாரப்போவதே நல்லகாரியம். அதாவது பெரும்பேறு.

குறிப்பு:—மலையின் அகத்துக் கோயில்கொண்டிருக் கும் எம்பெருமானல்லவோ பரமபிராப்பியம். வெளி யில் கிடக்கும் வெறும் மலையே உஜ்ஜீவிக்க உபாயம் ஆகுமோவென்ன, ஒன்றை கிட்டினால் நெருக்கத்தால் மற்றொன்றுக்கு அது உய்த்துச்செல்லுமென்பது தாத் பரியம்.

6-ம் பாசுரம்.

கிறியென நினைமின் கீழ்மை செய்யாதே
உறியமர் வெண்ணெ யுண்டவன் கோயில்
மறியொடு பிணைசேர் மாலிருஞ் சோலை
நெறிபட வதுவே நினைவது நலமே.

"இத்தையே பரமப்பிராப்பியம் என்று நினையுங் கோள். வெறொன்று பிராப்பியமென்று நினையாமல் உறியமர்வெண்ணெய் உண்டவன் அச் சுவடு அழியா மே புகுந்து நின்றருளுகிற சர்வரசமான திருமலையை வேறு பிரயோஜனத்தை எதிர்பாராதே ஸ்வப்பிரயோ ஜனமாய் நினைக்கும் அதுவே பிராப்பியம் என்கிறார்."

குறிப்புகள்:—எம்பெருமான் ஸந்நிதானத்தைப்புரு ஷார்த்தம் கிட்டும் உபாயமாய்த் தியானித்து இரு" என்று இப்பாசுரத்தில் கற்பிக்கின்றார்.

தமிழ்ப் பாடம் 20.

நள வெண்பா—சுயம்வர காண்டம்

[366-வது பக்கத் தொடர்ச்சி]

காள்ளைபோ கின்ற துயிரென்னுங் கோளரவின்
ள்ளெயிறோ மூரி நிலாவென்னும்—உள்ளம்
காடிதிரா வென்னுங் குழையுந் தழல்போல்
நடிதிரா வாய்புலரா நின்று. 95.

பொழிப்புரை:—தமயந்தி, என்னுயிர் கொள்ளை பாகின்றதே என்பாள். கொலைசெய்யும் பாம்பின் ரிய பல்தானோ இவ்வலிய நிலவு என்பாள். இவ் ரவின் மனம் அதிகம் கொடியது, என்பாள். நெடு நரம் சும்மாவிருந்து வாயுலர்ந்து நெருப்பைப்போல் ழைவாள்.

வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ—திங்கள்
சொரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
எரிகின்ற தென்னோ விரா. 96.

பொழிப்புரை:-"சூரியனை விழுங்கியிருப்பதால் புழு ங்குகின்ற காரணத்தினாலோ, அல்லது என் கொங் கையிலிருந்து வீசுகின்ற அனலில் பொசுங்கியோ, அல்லது சந்திரனிடத்திலிருந்து விரிகின்ற வெண்மை யான நிலவினால் வேகின்ற காரணத்தினாலோ, எத னால் இந்த இரவு இவ்வாறு எரியலாயிற்று" என்பாள்.

ஊழி பலவோ ரிரவாயிற் றோவென்னும்
கோழி குரலடைத்த தோவென்னும்—ஆழி
துயிலாதோ வென்னுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து. 97.

பதப் பிரிவு:—ஊழி பல ஓர் இரவு ஆயிற்றோ என்னும் கோழி குரல் அடைத்ததோ என்னும் ஆழி துயிலாதோ என்னும் சுடர் மதியம் கான்ற வெயிலால் உடல் உருகா வீழ்ந்து.

அன்வயம்:—சுடர்மதியம் கான்ற வெயிலால் உடல் உருகா வீழ்ந்து, ஊழிபல ஓர் இரவு ஆயிற்றோ என்னும். கோழி குரல் அடைத்ததோ என்னும். ஆழி துயிலாதோ, என்னும்.

பதவுரை.

சுடர் - தீச்சுடர் போன்ற
மதியம் - சந்திரன்
கான்ற - வீசிய
வெயிலால் - வெய்யிலினால்
உடல் - உடல்
உருகா - உருகி
வீழ்ந்து - விழுந்து,
"ஊழி பல- அனேக யுகங்கள் ஒன்றாய்ச்சேர்ந்து
ஓர் - இந்த ஒரு
இரவு - இரவாக
ஆயிற்றோ - ஆயினதோ"
என்னும் - என்பாள்.
"கோழி - யாமக்கோழி
குரல் - குரல்
அடைத்ததோ - அடைத்துக் கிடக்கின்றதோ"
என்னும் - என்பாள்.

"ஆழி - கடலானது
துயிலாதோ - தூங்காதோ"
என்னும் - என்பாள்.

விரிவுரை:—பொழுது விடிந்ததும் சுயம்வரம் நிக ழும் ஆதலால் அவ்விரவு தமயந்திக்கு எளிதில் கழிய மாட்டேன் என்று வளர்வதாயிற்று. ஆதலால் இங்கு இரவைப்பழிக்கின்றாள். இரவு விடியாததற்குக் கோழி கூவாததேகாரணம் என்று எதிருற நினைத்தவள்போல் 'கோழி குரல் அடைத்ததோ' என்று கோழியையும் வைகின்றாள். பிள்ளைமீன் புள்ளரிக்கும் நாடன் திரு மடந்தை காதலால் பேதுற்று இவ்வாறு ஏசுவது இயற்கையே. காமநோய் உற்று நலிகின்றவர்கள் கட லொலி கேட்க மேன்மேலும் வருந்துவர். நள்ளிரவி லும் ஓயாது ஒலித்துக்கொண் டிருக்கின்ற கடல் தான் தூங்கிக்கிடக்க மாட்டேன் என்கிறதே என்று இரங்குகிறாள்.

குறிப்பு:—ஓ, என்பது ஒரு இடைச்சொல் லென் றும், அது வேறு சொற்களோடு சேர்ந்து பல பொரு ள்கள் தருமென்றும் முன்னே (364-வது பக்கம்) சொன்னேன். இங்கு, இரவாயிற்றோ, அடைத்ததோ, துயிலாதோ என்று வருகின்ற ஓகாரங்கள் மூன்றும் இரக்கப்பொருளைத் தருவன. இரக்கம், என்பது கூறுவோர் படுகின்ற வருத்தத்தைக் காட்டுவது. ஆத லால், ஓகார இடைச்சொல்லிற்கு அங்குக் காட்டிய வினா, ஒழியிசை, ஐயம், இழிவு, எதிர்மறை என் னும் பொருள்களோடு இந்த இரக்கப்பொருளையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

முன், 96-வது செய்யுளில், புழுங்கியோ, கொளுந் தியோ, வேகின்றதேயோ, என்ற இடங்களில், இரவு எரிவதற்கு இவை மூன்றினில் எது காரணமாயிருக் கலாம் என்னும் சந்தேகத்தைக் காட்டுகின்றபடியால் அவை ஐயப்பொருளில் வந்திருக்கின்றன.

2. என்னும் என்பது வினைமுற்று. இவ்விதம் உம் என்று முடிகின்ற வினைமுற்றுக்களை உயர்திணையோடு சேர்த்துச் சொல்லுகின்ற வழக்கம் சாதாரணமாக இல்லை. கிளி பேசும், குதிரை ஓடும், மரம் வளரும், மலை நிற்கும், என்று மிருகங்கள் உயிரில்லாத பொருள் கள் இவைகளோடு சேர்த்தே உம் என்று முடிகின்ற வினைமுற்றை உபயோகிக்கப் பார்த்திருப்பீர். ஆனால் மனிதர்களுக்கும் அவ்வித வினைமுற்றை உபயோகிப் பது பிழையன்று. முனி கூறும். தமயந்தி மாலை சூட் டும். நளன் தூதுபோகும், என்று சொன்னாலும் முனி கூறுவான், தமயந்தி மாலை சூட்டுவாள், நளன் தூது போவான், என்ற அர்த்தத்தையே அவை தரும். செய்யுளில் சாதாரணமாகச் செய்யும் என்ற வாய்பாட்டு வினைமுற்று, மனிதர்களுக்கும் மற்றவை களுக்கும் பொதுவாய் வருமாதலால், அவ்வாறு வந்த இடங்களில் சந்தேகங் கொள்ளவேண்டா.

3. உருகா என்பது உருகி என்னும் உடன்பாட்டுப் பொருளில் வந்த வினையெச்சம் என்பதை எளிதில் கண்டுகொள்வீர்.

ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமேல்—ஓடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ காமத்
துறைவா யடங்காத் துயர். 98.

கருத்து:—வண்டுகள் அருகே பறந்த காற்றுப்பட் டாலும் வாடுபவளும், தன் முலையின் பாரமே தாங்க மாட்டாமல் சோர்பவளும் ஆகிய மெல்லிய தன்மை வாய்ந்த தமயந்தி இக் காமநோயை எப்படிப் பொறுப் பாள் பாவம், என்று கவி இரங்குகின்றார்.

ஈர மதியே யிளநிலவே யிங்ஙனே
சோர் குழலின்மீதே சொரிவதெவன்—மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
இரவளித்தா னல்லனோ வின்று. 99.

பதப்பிரிவு:—ஈர மதியே இள நிலவே இங்ஙனே சோர் குழலின் மீதே சொரிவது எவன் மாரன் பொர அளித்தான் கண்ணி உனக்கு புலரா இரவு அளித் தான் நல்லனோ இன்று.

அன்வயம்:—ஈரமதியே சோர்குழலின்மீது இள நிலவு இங்ஙன் சொரிவது என்! உனக்கு இன்று பொரக் கண்ணி அளித்தான் மாரன், (நல்லனோ); (உனக்கு இன்று பொர) புலரா இரவு அளித்தான் (சூரியன்) நல்லனோ?

கருத்து:—இதுவும் கவி கூறுவது. அவரும் தம யந்திபடுகின்ற துன்பத்தைப் பார்க்கச் சகியாமல், அவ ளோடு சேர்ந்துகொண்டு சந்திரனையும் மன்மதனையும், இரவை அகற்றவாமல் காலம் தாழ்க்கின்ற சூரியனை யும், வைகின்றார்.

பதவுரை.

ஈர - குளிர்ந்த
மதியே - சந்திரனே,
சோர் - சோர்கின்ற
குழலின்மீது-கூந்தலையுடைய தமயந்தியின்மீது
இளநிலவு - இளநிலாவை
இங்ஙன் - இப்படி
சொரிவது - சொரிவது
எவன் - என்ன காரணம்? (உனக்கிது அழக ன்று). ஆனால் உன்னைச் சொல்லி என்னபயன்!
இன்று - இன்றையதினம்,
பொர - (மயில்போன்ற தமயந்தியை வேட்டை யாடிப்) போர் செய்ய
உனக்கு - உனக்கு
கண்ணி - வலைபோன்ற நிலவை
அளித்தான் - கொடுத்தவனாகிய
மாரன் - மன்மதனோ (அல்லது)
புலரா-(நெடுநேரம் நீ போர் செய்யும் பொருட்டு) விடியாத
இரவு - இராக்காலத்தை
அளித்தான் - (உனக்கு) கொடுத்தவனாகிய சூரியனோ
நல்லன் - நல்லவன், என்று நினைப்பது.

விரிவுரை:—"சந்திரனே, நீ ஈரமதியாயினும் உன க்கு ஈரமதி இல்லை. (ஈரமதி-குளிர்ந்த சந்திரன், கரு ணையோடு கூடிய மனம்) இப்படி யேன் உன் நிலவை எல்லாம் புள்ளினும் மெல்லிய தன்மைவாய்ந்த இத் தமயந்தியின் மேலேயே பொழிந்து ஒழிகின்றாய். நீ தான் இப்படி என்றால், மயில் போன்ற பெண்களைப் பிடிக்க நிலவென்னும் வலையை உனக்குத்தந்துவைத் தானே அந்த மன்மதனைத்தான் நான் நல்லவன் என் பேனோ! அல்லது விடியாத இரவை உனக்குத் தருகி ன்ற சூரியனைத்தான் நல்லவன் என்பேனோ!" என்று

கவியே தன் கதையுடன் கலந்துகொண்டு தமயந்திக்காகப் பரிகின்றார்.

——

தாங்கு நிலவின் றழல்போய்த் தலைகொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப—
[ஓங்குயிர்ப்பின்
தாமங் கரியாத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று. 100.

பொழிப்புரை:—தாங்கியநிலவின் நெருப்புப்போய்த் தலையேறிவிட்டபடியால், மணம்பொருந்திய அவளது கூந்தலை அடைந்த வண்டுகளின் சிறகுகள் வெந்து போகவும், பெருமூச்சு விடுவதால் அதன் வெப்பம் பட்டுப் பூமாலைகள் கரிந்துபோகவும், தன்னந்தனியாய்த் தான் படும் துயரிற்கு அந்நள்ளிரவே சாக்ஷியாய் இன்று தமயந்தி சோர்கின்றாள்.

——

மையுற்ற கண்ணருவி வார வளைசோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து—மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியாள்
தானிருந்து செய்தா டவம். 101.

பொழிப்புரை:—மை இட்ட கண்களிலிருந்து நீர் அருவிபோல் பொழியவும், வளைகள் நழுவவும், கையைக் கன்னத்தில் வைத்தும், மெய்சோர்ந்தும், தேன் இருந்த மன்மதபாணங்களாகிய மலர்களே தீயாகவும், இனிய மொழியுடைய தமயந்தி நளனைக்குறித்துத் தவம் செய்வாள்போல் இருந்தாள்.

——

அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விள்ளாத கூரிருளாய்—உள்ளப்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்கள்
இதயமே போன்ற திரா. 102.

வேசியர்களது உள்ளத்தைப்போல் பொருளொன்றும் தெரியாமல் இருண்டிருந்தது அவ்விரவு என்பது கருத்து.

——

ஊக்கிய சொல்ல ரொலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர்—காக்க
இடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று. 103

நள்ளிரவில் ஊர்க்காவலர் பறையொலி எழுப்பி வீதியிற் செல்வதை இச்செய்யுள் குறிக்கின்றது.

——

சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுள் ளுறைபுகுதத் தார்வண்டு—காமன்றன்
பூவாளி யைந்திற் புகத்துயில் புக்கதே
யோவாது முந்நீ ருலகு. 104.

யானைமுதல் வண்டுகள் ஈறாக அவ்விரவில் யாவும் நித்திரையி லமர்ந்தன.

——

ஊன்றின் றுவகையா லுள்ள வுயிர்புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே—தான்ற
ளுரைசோரச் சோர வுடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று. 105.

பேய்களும் அதுவது நின்ற இடத்தில் அங்கங்குத் தூங்கலாயின.

அன்றி லொருகண் டுயின்றொருக ணார்வத்தா
லின்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ் சொலின்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்ற போதே
யவிழ்ந்ததே கண்ணீ ரவட்கு. 106.

பதப்பிரிவு:—அன்றில் ஒரு கண் துயின்று ஒரு கண் ஆர்வத்தால் இன் துணைமேல் வைத்து உறங்கும் என்னும் சொல் இன்று தவிர்ந்ததே போல் அரற்றி சாம்புகின்ற போதே அவிழ்ந்ததே கண் நீர் அவளுக்கு.

பதவுரை.

அன்றில் - ஆண் அன்றில்பறவையானது
ஆர்வத்தால் - (பெடை மீதுள்ள) ஆசையால்
ஒருகண் - தனது கண்களில் ஒன்று
துயின்று - துயில,
ஒரு கண் - மற்றொரு கண்ணை
இன் - தனது இனிய
துணைமேல் - பெடையின்மீது
வைத்து - வைத்துக்கொண்டு
உறங்கும் - உறங்குவதாகும்,
என்னும் சொல்-என்று உலகத்தோர் சொல்வது
இன்று - இன்றையதினம்
தவிர்ந்ததேபோல் - பொய்யாய் விட்டதுபோல்
அரற்றி - (அப் பெட்டை அன்றில்) கதறி
சாம்புகின்றபோதே - அழிந்தவுடனே
அவட்கு - தமயந்திக்கு (அக்குரலைக் கேட்க)
கண்நீர்-கண்களினின்று நீர்
அவிழ்ந்தது - வழியலாயிற்று.

விரிவுரை:—காமநோய் அடைந்தவர்கள் பொறுக்க முடியாதவைகளில் அன்றிலின் குரல் ஒன்று. அவ்விரவிலே அன்றில் கூவ அக்குரலைக்கேட்டுத் தமயந்தி பெரிதும் வருந்தினாள். அந்த அன்றில் ஏன் கூவியிருக்கலாம் என்பதற்கும் கவி ஒரு காரணம் கற்பிக்கின்றார். ஆண்பெண் அன்பு அன்றிற் பறவைகளுக்குள் மிக அதிகம். மற்றப் பறவைகளைப்போல் அவை அவ்வக் காலத்தில் கூடிக் குஞ்சுகள் வளர்ந்தவுடன் பிரிந்து வேறுவேறாகி விடுவதில்லை. ஆயுள்வரையிலும் ஒரே ஆணும் பெண்ணும்விவாகமானாற்போல் கூடிவாழும்.இவ்வாழ்க்கையில் ஒருநிமிடநேரமும் பிரிந்திருக்கச் சகியா. இந்த அன்பை ஆதாரமாக வைத்துக்கொண்டு கவி இங்கு ஒரு விநோதம் கற்பிக்கின்றார். தூங்குகின்ற காலத்திலேயும் ஆணன்றில் ஒரு கண் தூங்கி இன்னொரு கண்ணால் தன் பெடையைப் பார்த்துக் கொண்டிருக்கும் என்பது உலகறிந்த விஷயமாம். பெண்அன்றிலும் ஒருகண் தூங்கி மற்றொரு கண்ணால், ஆணன்றில் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கின்றதோ என்று பார்த்திருக்குமோ என்னவோ! ஆணன்றில் தூக்கமயக்கத்தால் ஒரு போது தன்னிரு கண்களையும் மூடிவிட நேருமாயின், உடனே அப்பெடை, "இவ்வளவுதானோ இதற்கு என்மேல் இருந்த ஆசை" என்று கதறிச்சோருமாம். இப்படி யொரு அன்றில் அரற்றக்கேட்டுத் தமயந்தி கண்ணீர் வடித்தனள்.

ஸ்ரீ வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ்

[375-வது பக்கத் தொடர்ச்சி]

6. வாரானைப் பருவம்.

விளரிச் சுரும்பர் தளையவிழ்க்கும்
மென்றோட் டம்போ ருகத்தடத்தின்
விழிக்குஞ் சுழல்கட் சினைவிடங்கர்
விடவாய்த் தளைப்புக் குளமயங்கித்
தளரித் துயரந் தவிர்க்கவென்று
தடக்கை நீட்டி மதக்களிறு
தனியே பொதுவே மூலமெனச்
சடைப்புங் கவனும் பங்கயனும்
களிக் கடவுள் குழாங்களுமே
கைவிட் டிருப்பத் திகிரியைமுன்
கடுகத் துரந்து புள்ளூர்ந்து
கடுங்கார் மின்னோ டியைவதொப்ப
முளரித் திருவோ டெதிர்ந்தளித்த
முதல்வன் வருக வருகவே
மும்மைத் தமிழ்சேர் வெண்ணெய் நல்லூர்
முகுந்தன் வருக வருகவே. 1.

பண்ணைத் தரங்கம் சுருட்டெறும்
பரவைப் புனன்மொண் டெதிர்ந்துயர்ந்த
பகட்டுக் குவட்டுப் பொழியுமுகில்
படும்ம் மதத்துக் களிற்றினமென்
றெண்ணித் தினைப்பைம் புனங்காக்கு
மிருண்மெய்க் குறவர் சிறார்கவண்விட்
டெறியத் தொளைமுள் ளெயிற்றரவ
மெழுவெண் பசியா லங்காப்ப
வண்ணற் சினமா மடங்கலதிர்ந்
தழன்று முழைவிட் டெழச்சொரியும்
அருவி மணிபோன் முத்தலைக்கு
மணியார் நந்தி மலைக்கரசே
வண்ணக் களப முலையலர்மேன்
மங்கைக் கதிபன் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய்நல்லூர்
வாழ்வே வருக வருகவே. 2.

சுருதித் தருவிற் கிளந்தளிராந்
துணைத்தாண் மலரிற் சிலம்பலம்பத்
தொளைக்கிண் கிணியு மரைநாணுஞ்
சுடர்பொற் கலையு மருங்கின்மின்னப்
பருதிக் கடவுள் கண்முகிழ்க்கும்
பதும ராகங் கதிர்கொழிப்பப்
பச்சைப் பசிய துழாய்வனத்திற்
பதுமப் பூவை விளையாட
நிருதிக் கமையா மயல்பூட்டி
நிமிரத் தடந்தோள் வலயமொளி
நிலவ மணிச்செஞ் சுடர்மவுலி
நீலக் கிரிமேல் கதிர்கடுப்ப
வருதிக் கனைத்தும் புகழவட
மலைமே னின்றான் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய்நல்லூர்
வாழ்வே வருக வருகவே. 3.

கள்ளக் கருங்கட் கடைசியர்தங்
கணவர்க் கருத்தி மிகுநறவைக்
கலசத் திடைவைத் தயல்வயலிற்
கமலங் குவளை களைகளையப்
பிள்ளைக் குருகுக் கிரைதேடிப்
பெயருஞ் சிறைமென் மடக்குருகு
பெருகப் பருகி மதிகலங்கிப்
பேதை யவர்தம் விழிநிழலை
மெள்ளக் கயலென் றுணர்ந்துகொத்தி
வெறித்தே திரியக் கண்டுமென்மேல்
விளைக்குந் தவளக் குறுமுறுவல்
விரிவெண் ணிலவு கதிர்கொழிக்கும்
வள்ளத் திரளார் முனைப்பாடி
வளநா டுடையான் வருகவே
வண்மைப் புகழ்சேர் வெண்ணெய்நல்லூர்
வாழ்வே வருக வருகவே. 4.

வேறு

கொண்டலி னமர்ந்தசெந் தாமரைக்
காடெனக் குமுதவிதழ் கருணைநயனங்
குவலய மளந்ததா ளிணைசெங்கை
யொளிர்தரக் குண்டலந் திருவில்வீச
விண்டலஞ் சுடருமதி மண்டலந்
தோற்பவிளவெயில்செய்முகமண்டலத்தில்
வெண்பளித நாமமுஞ் சிந்தூரத்
திலதமும்வெண்ணிலவுபொழிமுறுவலும்
கண்டகங் களிகூர நெஞ்சகங்
குளிரயாங் காணவொரு நாள்வருகெனக்
கருதுமன் பர்க்கெளிய ளுதலிற்
றளரும்நடை காட்டிநூ புரமொலிப்ப
வண்டலம் பியபசுந் துளவமென்
றொடையசைய வசுதேவன்மகன் வருகவே
வண்ணன் மணிவெயிலொழுகு வெண்ணெய்நகர்
வாழ்கமல மங்கைநா யகன்வருகவே. 5.

தாதார்நறுந் துளவுதள வங்குரா
லிளந்தளிர் முதற்பிலியீறாய்த்
தகைநெடுங்குழலிற்புனைந்துவெங்கழை
யினுமிழ்தண்ணமுதவிசைவடித்துச்
சேதாவிளங் கன்றுமுல்லைச்சிறார்களின்
றிரளுமொருகோடிசுற்றச்
செழுமலர்ப்பூவைநிகர்மேனியிற்
புகர்நிறச்சிறுதுகட்படலைபம்ப
வேதாதியந்தமுங்காதலங்கரைபெறு
மின்னிடைப்பொதுவர்மின்னார்
வேல்விழியும்நெஞ்சமும்பின்வர
விணைப்புருவவிற்கோடவிளநகைவர
மாதாமுலைக்கண்வழிபாலொழுகுமாலைவாய்
வருகோவலன்வருகவே
வண்ணன்மணிவெயிலொழுகுவெண்ணெய்நகர்
வாழ்கமலமங்கைநாயகன்வருகவே 6.

கேசவன்வருகமதுசூதனன்வருக
நரகேசரியினுருவன்வருக
கிளர்புனலின்முழுகுநிலமகளையொரு
கோட்டேந்துகேழற்பிரான்வருகமா
பாசவெம்பிறவிவிடவடியவர்க்கருள்பரம
பாவனன்வருககெருடப்
பறவைவாகனன்வருகதாமோதரன்வருக
பதுமநாபன்வருகமா

ரீசவஞ்சனையடரும்வில்லாளிவருக
புவியாவைக்குமிறைவன்வருக
இருடிகேசன்வருகநாராயணன்வருக
இமையவர்க்கதிபன்வருக
வாசவன்றுணைவருகமாதவன்வருககலை
வாணிபதிதந்தைவருக
வண்ணன்மணிவெயிலொழுகுவெண்ணெய்நகர்
வாழ்கமலமங்கைநாயகன்வருகவே 7.

வேறு

இரவி மதியம் நேமி பணிலம்
இகல்கொல் கலுழ னிரதமே
இலகு கமல மாது நிலமி
னிருவர்மருவு தெரிவைமார்
அரவி னரசு சீத வமளி
யகிலவுலகு மயினியே
அயனு மதலை தேவர் முழுது
மடிமை புரியு மடியவர்
பரவ வரிய வான சுருதி
பலவுமுனது பெயர்களே
பதும மகள லாதுன் மகிமை
பகரஅரிய ருளர்கொலோ
வரவு மெளியை போலு மடிய
வருக வென்முன் வருகவே
வருபு வனமும் வேனு வனமும்
மகிழு மதிபன் வருகவே. 8.

அறிவில் சிறுவரோடு தொடரி
லலர்மெல் லடிகள் தளருமே
அலைகொள் குழலு நீல நிறமு
மளவில் புழுதி படியுமே
எறிவெவ் வெயிலி னூடு திரியி
லிளகி வெயர்வு சொரியுமே
இலகு திலகம் வெயர்வி லழியி
லெனது மனமு முருகுமே
நறிய கனிகள் காய்கள் தருவன்
நறுநெய் தருவன் வருகெனு
நவிலு மெழில சோதை மனையி
னடலை வகைசெய் சிறுவனே
மறுவின் முனிவர் தேட வரிய
மறையின் முதல்வன் வருகவே
வருபு வனமும் வேனு வனமு
மகிழு மதிபன் வருகவே. 9.

குறிய வுருவம் வானின் முகடு
குறுகு நெடியன் வருகவே
கொடிய சிலையை மாதி னுருவு
கொளுவு சரணன் வருகவே
முறிய மருது சகடு சிதற
முடுகு மதலன் வருகவே
முலையை யுதவு பேயினுயிரின்
முதல்கொள் கபடன் வருகவே
நறிய கலவை பூசு மவள்மெய்
நலமு ணமலன் வருகவே
நமனும் வெருவு நாக முடியி
னடன மிடுமன் வருகவே
வறிய முனிவன் வாழ அவலின்
மகிழு மெளியன் வருகவே
வருபு வனமும் வேனு வனமும்
மகிழு மதிபன் வருகவே. 10.

வாரானைப் பருவ முற்றிற்று.

பழக்கமும் கல்வியும்

மாந்தருடைய எண்ணங்கள்பெரும்பாலும்அவரவர் மனப்பான்மையைப் பொறுத்துள; அவர்தாம் மொழிவதும் வரைவதும், அவர் கற்றதையும் அதன்வழித் தெளிந்ததையும் சார்ந்துள; ஆனால் அவர் இயற்றும் கருமங்கள் அவர் பழக்கத்தின் வழியேதான் நிகழும். ஆதலால், மேக்கியவேலி என்றபெரியார், நன்குகுறித்தவாறு, இயற்கைக்குணத்தின் திடத்தையாவது மொழியின் திறமையையாவது, வழக்கத்தின் ஆதரவு பெற்றாலன்றி நம்புவதிற் பயனில்லை. உதாரணமாக, பெருந்தீச்சூழ்ச்சி இயற்றுதற் கெண்ணும் ஒருவன், மூர்க்கத் தன்மையையாவது மொழியுறுதியை யுடையவனையாவது துணைக்கோடல் நன்றன்று; அவ்வித வினையில் முன்பே ஆழ்ந்துள்ளவனையே கோடல் வேண்டும். இக்கொள்கைக்கு விலக்கும்விதியும் உண்டெனினும், இயற்கைக்குணமேனும் மொழியுறுதியேனும், வழக்கத்தைப்போன்று அவ்வளவு வலிவுடையன வல்லவென்ற கொள்கையே பெரிதும் நிலவுகின்றது. கொலையாளி ஓரே தடவைக் கொலைபுரிந்தாற் போதும்; உயிர் செகுத்துப் புலால்விற்பானைப்போன்று, திடமனமாகிவிடுவான் என்று உறுதியாக எண்ணப்படுகின்றது; கொலைத்தொழிலே யாயினும், விரதங் கொள்ளுதல் வழக்கத்திற்குரிய வலிமையுடையதென்று எண்ணப்படுகிறது. மற்றக்காரியங்களில், பழக்கமே ஆட்சி செய்வதை எங்குங் காணலாம். எவ்வாறெனில், மாந்தர், வாய்ப்பறை யடிப்பர், ஆட்டுவிப்பேன் என்பர், வாக்குறுதி பயப்பர்; ஆனால், வினை நேர்ந்துழி, சாற்றியயாவையும்விடுத்துக் கண்டவர் அதிசயிக்கும்படி பழக்கத்தின் பாதம் பணிவர்; மொழிந்தவையெலாம் பட்ட சிலைபோலும் அல்லது பழக்கம் என்ற பாகன் ஓட்டும் பொறிபோலும். பழக்கத்தின், செங்கோன்மையோ கொடுங்கோன்மையோ, இன்னதென்றும் பார்க்கின்றோம். அறிஞர் தொகுதியைச் சார்ந்த இந்தியர்கள், முணுமுணுப்புச் சிறிதுமின்றி, தீப்பாய்ந்து உயிரிழக்கின்றனர்; மனைவியுங்கூட, கணவனுக் கடுக்கிய சிதையில் உடன்மாய முன்வருகிறாள். பண்டைநாட்களில் ஸ்பார்ட்டாநாட்டு இளைஞர்கள் டையானா என்றதெய்வ அணங்கின் பீடத்தில் பலியிடப்பட்டனர்; அப்பொழுது உடலைச் சிறிதுகூடச் சொடுக்கினாரில்லை; எலிஸபெத் அரசி நாடாண்டகாலத்தில், ஐரிஷ் நாட்டு அடங்காக்குடிமகன் ஒருவன், கொலைத்தண்டனை விதிக்கப்பட்டபோது, வழக்கமாயுள்ளகயிற்றால்தன்னைத் தூக்கிலிடாமல், கொடிகளால் முறுக்கிய கயிற்றொன்றினால் தன்னைத் தூக்கிலிட அனுமதி வேண்டினன்; ஏனெனில், தனக்கு முன்னிருந்த அடங்காக் குடிமக்கள் பலர் அவ்வாறு தூக்கிலிடப்பட்டனர் என்று காரணங் கூறினன். ரஷியாவில், தன் பிழைகளைக் குறித்துத் தவமியற்றும் துறவிகள் பலர், இராமுழுதும், தண்ணீர் நிறைந்த தொட்டியில் இருப்பதுண்டு; நீரெல்லாம்

பனிக்கட்டியாக உறையும் வரையில் இருப்பர். உளத்தையும் உடலையும், பழக்கம் தனக்கு அடிமையாக்குமென்பதற்கு, சாட்சி பலவுள. ஆதலின், பழக்கமே மானுட வாழ்க்கையின் தலையதிகாரியாக நிற்பதால், மாந்தரெல்லாம் நற்பழக்கத்தையே என்றும் தேடவேண்டும். இளமையிற் றொடக்கிய பழக்கம் நிறைநன்று பயக்கும். இதைத்தான் கல்வியென வழங்குகின்றோம்; இக்கல்வி காரியப்படுவகையானே, இளமைப் பழக்கமேயன்றி வேறன்று. ஆதலின், இளமையில் நாவானது, முதுமையைவிட, மொழிகளின் எவ்வகைச் சொற்களுக்கும் ஒலிகளுக்கும், ஏற்றவாறு அமைந்து கொள்கிறது; உறுப்புக்களும் எவ்வித வேலைக்கும் அசைவிற்கும் இணங்குகின்றன. காலந் தாழ்த்திக் கற்கத் தொடங்கினோர்க்கு, நாவும் உறுப்பும் அவ்வாறு இணங்குவதில்லை யென்பது உண்மை; ஒரு துறையினும் ஊன்றிக்கொள்ளாத சிலர்பால், நாவும் உறுப்பும் காலங்கடந்த பருவத்திலும் இணங்குந் தன்மையனவாய்க்காணலாம்; எனினும் அதுவோ அருமையினும் அருமையே. ஒருவன்பால் உண்டாய பழக்கமே, மிக்க வலிமை யுடையதெனின், பல்லோர்க்குரித்தாய வழக்கம் அதைவிடப் பன்மடங்கு வலிவுடைத்து; ஏனெனில் ஆங்குச் செயல் கற்பிக்கிறது, சேர்க்கை துணிவு ஊட்டுகிறது, மேலாதலெனும் உணர்ச்சி விரைவுறுகின்றது புகழ் உயர்த்துகின்றது; அத்தன்மையினால், பழக்கம் உச்சநிலை பெறுகிறது. மக்களின் நற்கருமப்பெருக்கு, நல்லாறிடைப்பட்ட ஒழுக்கத்திற்கு இணங்கிய சமூகத்தை ஊன்றி நிற்கும். செங்கோன்மை, முளைத்து எழுந்த நல்வினையை வளம்படுத்துமே யன்றி வித்திடத்தூறும் குறையை பொழிக்காது. ஆனால், தீமையாதெனில், ஆய்ந்து தேர்ந்து நிறுவிய முறைகள், நாடு தற்குத் தகுதியிலா முடிவின்பாற் செலுத்தப்படுவதே.

பெனிடிக்ட் டி ஸ்பைனோஸா

Benedict de Spinoza

"All our modern philosophers, though often perhaps unconsciously, see through the glasses which Baruch Spinoza ground."

"The true aim in life should be illumination, the true morality the practice of justice, the true redemption should be the liberation of the soul from error and its union with God through consciousness."

"The Divine Light is always in man, presenting itself to the senses and to the comprehension, but man rejects it."

I பொதுவுரை.

உலகமுலகாதிகள் ஜடஜீவன்கள் ஆகியஇவைகளுக்குள் உள்ள ஒற்றுமையையும், ஜீவனின் தோற்றம் பரிணமம் இலக்ஷியங்களையும், ஆன்மாக்களின் பரஸ்பர இணக்கம்கடமைகளையும், காரணத்துண்மை நிகழ்ச்சி முறை முடிவின் தன்மைகளையும், திடசித்தம் நோக்கத்திற்கேற்றகருமம் கருமத்திற்கேற்ற சூழ்ச்சி ஆகியவைகளையும், நன்மை தீமை, உயர்வு தாழ்வு, சுகதுக்கம், ஆனந்தம் சுகம், விவேகம் மடமை, ஞானம் விவேகம் ஆகியவைகளின் தாரதம்மியங்களையும்பற்றி உறுதியுடன் அறிவுறுத்தலே தத்வக்ஞர்களின் கருத்தாகும்.

"அகண்ட அகாத நித்திய வஸ்துவானது பல்வேறு உருக்கள் தாங்கி, பன்னெறிகளில் தோன்றி, பலதிறக் குணாதிசயங்களுடன்பரிணமித்துநிற்பது" என்றுரைப்பதன்பொருள் என்னையோ? பரிபூரணவஸ்து குற்றங் குறைகள் செறிந்த பொருள்களாக மாறியது எவ்வாறோ? நிர்மலவஸ்து மலினப் பொருள்களாக இழிந்தது ஏனோ? பிரபஞ்சாதிகளெல்லாம் ஓய்வொழிவுகளில்லாமல் என்ஞான்றுஞ் சலித்து மாறவனவெனின் ஸ்திரவஸ்து எங்குளதோ? இதனை அறிவிக்கும் கருவி, அல்லது சக்தியாதோ? சத் அசத், அல்லது நிர்க்குணம் குணம், அல்லது மேன்மை தாழ்மை, அல்லல் அறம் மறம், அல்லது அழகு விகாரம், என்பனவாதிகளைப் பற்றிய உண்மைதான் யாதோ? மூலம், அல்லது மூலவஸ்துவின் குணாதிசயங்களையும் இதனின்று பிரபஞ்சங்களும் பிரபஞ்சாதிகளும் வெளியாகி வியாபித்து இயங்கும் முறையையும் பற்றிச் சித்தாந்தப்படுத்தலே தத்துவத்தின் இலக்கணமாகும்.

தத்வஞானமென்பது, பிரகிருதி சாஸ்திரத்தின் பல்வேறு பகுதிகளி லொன்றன்று. அதுதான் நானாவித மதங்களின் சூக்ஷமமாத்திரமன்று; பிரத்தியேக நடையில், எளிதில் விளங்காத பரிபாஷையில் பிரபஞ்சவிஷயங்களைப்பற்றிச்சாதித்துமாந்தரைமயக்கி அலைப்புறுத்துவது மன்று; அதிநுட்ப தர்க்கமுறையே பிரதானமெனக் கொண்டு அசாதாரணக் கேள்விகளைப் பலபடி பின்னிப் பரமிக்கச்செய்வதன்று; ஏனைய காவியங்களிலும் சாஸ்திரங்களிலும் சமயங்களிலும் விரிக்கப்படும் விஷயங்களை ஒன்றாகத்திரட்டி, அவரவர் மனோபாவத்திற்கேற்றபடி பெருக்கித் திருத்திவருவதும் அன்று; புலனுணர்ச்சியே நம்பத்தக்கதெனவும், ஸ்தூலஆராய்ச்சிகளுக் குட்படுபவைகளே மெய்ப்பொருள்களெனவும்கொண்டு பரிசீலனைகள் செய்துவரும் பிரகிருதி சாஸ்திரங்களின் முடிவுகளை முற்றிலும் அங்கீகரிப்பதன்று; வெறும் ஆசார வுபசாரங்களும், வந்தனை வழிபாடுகளும், வீண் கிரியைகளும், குருட்டுப் பக்தியும், கேவலப் பிரேமைகளுமே ஜீவன்முக்திக்கான செந்நெறியெனச் சாதித்துவரும் மதக்கட்சிகளைச் சுயவாராய்ச்சியும் ஆழ்ந்து விரிந்து தீர்ந்த விசாரணையுமில்லாமல் பின்பற்றித் தொடர்வதன்று; அகம் புறம், ஜடம் ஜீவன், வஸ்து சாயை, எனக் கூறுபடுத்தி, ஒன்றையே மேம்படுத்தி மற்றதை மறுத்து மனதைக் கலக்கி, இதயத்தை ஓர் இருட்டகமாக்குவதன்று; இல்லாததைக் கற்பித்து உள்ளதைத் திரித்துக் கொக்கரிப்பதன்று; விநாடிகள்தோறும் மன்பதைகளைத் தாக்கும் அல்லல்களை அலக்ஷியஞ் செய்து ஒதுக்குவதன்று; ஆனால் உள்ளதை உள்ளவாறு அறிவித்து, உணர்ச்சி எண்ணம் சொல் செயல்களாகியவைகள் ஒன்றையொன்று பிரதிபலிக்கச் செய்யவல்ல ஆதாரமாகவும் பக்கபலமாகவுங்கொண்டு உயர்ந்து ஒன்றி நிற்றல் வேண்டுமெனத் தெளிவித்தலே தத்வ ஞானத்தின் மெய்ந்நோக்கமாகும். "இடையூறிடுக்கண்களும், காமம் வெகுளி மயக்கங்களும், எவ்வாறு எதனின்று

188968

"எற்றுக்கு வெளியாயின," என்ற பிரச்னைகளை எழுப்பிப் பற்பலவிநோதக்கோள்களைச் சாதித்து வைப்பதன்று தத்துவஞானம். ஆனால், இல்லாததுதோன்றாது; தோன்றி மாறி யழிவது உண்மை வஸ்து அன்று; மெய்ஞ்ஞானம் பெருகவே அஞ்ஞானம் அழிகின்றது; இன்பம் பெருகவே துன்பம் ஒடுங்குகின்றது; ஆரோக்கியம் ததும்பவே சரீர அவதிகள் அடங்குகின்றன. தேகப்பிணியுற்றுத்துடிப்பவன் ஒருவன் 'பிணிகள் எங்கிருந்து உண்டாகி உலகில் பாவி ஜீவன்களை ஏன் வருத்துகின்றன?' என வினவிக்கொண்டே காலங்கழிக்காமல், உடனே வைத்தியனிடம் விரைந்துசென்று தக்க மருந்துகளால் அப்பிணியைப் போக்கிச் சுகித்திருக்க முயற்சிசெய்வதைப்போல், மனமருட்சியாலும் உபாதிகளாலும் பீடிக்கப்பட்டு அலறுபவன் 'வலி வருத்தம் ஏக்கம் ஆகியவைகள் எவ்விடத்திலிருந்து வெளியாகி இந்தப்புவியின்மீது வியாபித்து வருகின்றன? என்ற பிரச்னையை எழுப்பி, இதை விடுத்தற்கு அவல முயற்சிகள் பலவற்றில் தலையிட்டு நெட்டுயிர்த்துக் கண்மூடாது, உய்யத் தீர்மானித்து, மெய்ஞ்ஞானியிடஞ் சென்று உபதேசம்பெற்றுத் தெளியவேண்டும். இருளை யழிப்பது ஒளியாகும்; மயக்கத்தை யொழிப்பது விவேகமாகும்; துன்பத்தை முறிப்பது ஆனந்தமாகும். முன்னவைகளை யொடுக்கிப் பின்னவைகளைச் செழிப்புடன் வளர்த்துத் தருவன பகுத்தறிவும் நற்கருமமுமாம்," என வற்புறுத்துவது தத்வஞானம்.

இன்னமும், யாவற்றிற்கும் அடிப்படையாகவும் சர்வத்திற்கும் மேலாகவும் விளங்குகின்ற சூக்ஷ்மங்களைப் பொதுப்பட அறிவிப்பதேயல்லாமல் காலதேச வர்த்தமானங்களுக்குட்பட்டுத் தியங்கித்தவிக்கும்மாக்கள் ஒவ்வொருவர்க்கும் உரிய வழியை அறுதியிட்டு உறுதிகூறுவதும் தத்துவஞானத்தின் தொழில்ஆவதில்லை. பிரகிருதிசாஸ்திரங்களையும்மதங்களையும்எழிற்கலைகளையும் காவியங்களையும் பிறப்பிக்கின்ற மூலசக்தியை விஸ்தரிப்பதே தத்வஞானம். ஈதும் சுருங்கச்சொல்லின், உணர்வுகளைக் கட்டுப்படுத்தி, பிரேமைகளைத் தூயனவாக்கி, மனதை ஒருமுகப்படுத்தி, அச்சத்தைத் தவிர்த்து, வீரம்பெருக்கி, செயல்களைப் பலப்படுத்திப் பிரபஞ்சலீலையாம் மர்மத்தைக் கிரஹித்து ஆனந்தித்து அமைவுற்றிருக்கத் துணையாயிருப்பது தத்வஞானம்.

நிர்மலத் தியானத்தால் பரவஸ்துவில் ஒன்றுதல் வேண்டுமென்ற ஆர்வமும், தநுகரண புவன போகங்களனைத்தையும் ஓர்ந்தறிவதற்கான பக்குவமும், இதற்குரிய அநுபவமும், இதற்கேற்ற கலைப்பயிற்சியும், ஊன்றி விசாரிப்பதற்குவேண்டிய திறனும், இவைகளுக்கு இன்றியமையாத ஊக்கமும் மனோவன்மையும், இதற்கு வேண்டிய தேக ஆரோக்கியமும் மெய்ஞ்ஞானிக்கு முக்கிய சாதனங்களாகின்றன.

மனிதரிற் பெரும்பாலாரும் 'ஆன்றோர் ஆக்ஞை,' 'தலைவிதி,' 'சமூகச் சம்பிரதாயம்' என்ற வலையிற் சிக்குண்டு, உட்செவி பொலிவையடைத்து அகக்கண்ணொளியை மறைக்கவே, சக்தி ஒடுங்குகின்றது. சக்தி ஒடுங்கவே தேகம் பிணியுற்று, மனமழுங்கி, நெஞ்சம் புண்ணாகி அலமந்து வாடி மாய்கின்றனர்! ஆறறிவுபெற்று யாவற்றிற்கும் முதலாக விளங்கும் மனிதன் விலங்குகளுக்குங் கீழாகி, உண்டுறங்கி, இனத்தைப்பெருக்கி காலங்கழித்து உலர்ந்து நெட்டுயிர்த்து மரணக்குழியுட்குதித்து மறைதல் பரிதபிக்கத் தக்கதன்றோ? நினைத்த மாத்திரத்தில் மாந்தரனைவரும் கலைஞானிகளாகாவிடினும், தம் குணவொழுக்கங்களில், கழுதை பன்றி தேவாங்கு ஓநாய்களாகத் தாழ்ந்து மடியத்தான்வேண்டுமோ? ஒவ்வொருவரும் எளிதில் பூர்ண சுதந்திரம் பெறமுடியாவிடினும், சகித்தற்கு இயலாத அடிமைத்தனத்தையும், வெறுக்கத்தக்க வித்தியாசங்களையும் பரப்பவேண்டுமோ? பிணி மூப்பு சாக்காடுகளை அறவே வென்று நித்தியசிம்மங்களாய், மாறுதலற்ற யௌவனர்களாய், அந்தமில்லாத ஆனந்தர்களாய் வீற்றிருத்தற் காகாவிடினும், அவைகளின் ஆர்ப்பாட்டங்களையும் அபாயங்களையும் நன்றாக அறிந்து, அவைகளின் கொடூரங்களை மட்டுப்படுத்தி, உண்மையில் மானுடர்க்கு அவைகளாலுண்டாகும் நன்மையைத் தெளிந்து தக்கனபற்றிச் செய்யக்கூடாதோ? தத்வமார்க்கத்தை அனைவரும் முழுமனத்துடன் ஒப்பி எள்ளளவுதானேனும் முறைபிறழாது தொடர்ந்து இன்புற்றிருத்தல் கைகூடுவதற் கரியதாய்த் தோன்றுவதினின்று அதனைக் கற்பனைசக்தி மிகுந்த அபரிமிதக் கல்விச் செருக்குற்ற படாடோபர்களின் பொழுதுபோக்கான சொற்றொடர் ஆரவாரமெனப் பழித்துத் தள்ளிவிடல் தகுமோ?

இவைகளை மனதிற் கொண்டு நாமினி, ஐரோப்பிய தத்துவ ஞானிகளில் ஒருவராகிய ஸ்பைனோஸா என்பவர்தம் சரிதத்தையும் கற்பனைகளையுஞ் ஒருசிறிது இங்கு ஆராய்வோம்.

ஜூலியஸ் ஸீஸர்

[ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[350-வது பக்கத் தொடர்ச்சி]

அங்கம் 3. களம் 1.

காஸ்ஸியஸ்:—புதிய உத்தியோகங்களைப் பகிர்ந்தளிப்பதில் உன்குரல் மற்றெவர்க்கும் வலிமையிற் குறைந்ததாகாது. (1)

ப்ரூட்டஸ்:—அச்சத்தால் அவசமுற்றிருக்கும் இச்சனங்களை நாங்கள் அமைதியுறத் தணிக்கும்வரை நீ பொறுத்திரு. பிறகு, குத்தும்பொழுதும் ஸீஸரின்பால் குறையாத காதலேகொண்டிருந்த யான், இவ்வண்ணம் ஏன் இயற்றினே னென்பதற்குரிய காரணம் உனக்கு யாம் வழங்குவோம்.

ஆண்டனி:—உன்றனறிவினை யான் அயிர்க்கின்றேனலேன். (2) ஒவ்வொருவரும் இங்குத் தன் இரத்தமுடைய கரத்தினை எனக் களித்திடுக (3). முதலில் மார்க்கஸ் ப்ரூட்டஸ், உன்னுடன் கைகலந்து குலுக்குவேன்—அடுத்து யான், கேயஸ்காஸ்ஸியஸ், உன்கையினைக் கொள்கின்றேன். இதோ, டெஸ்ஸியஸ் ப்ரூடஸ் உனது. மெட்டல்லஸ் ஸிம்பர்—உனது. ஸின்னு,—இதோ. என்சூரனே, காஸ்க்கா, உனது (4)—கடையவனாயினும் அன்பிற் குறைபவனல்லா வென் ட்ரெபோனியஸ், உனது (5)—பெருந்தகையீர் எல்லீரும்.—ஐயகோ, யாது யான் இயம்புகேன் (6). இழிதகைவழிக ளிரண்டிலொன்றிலே நீங்கள் என்னை மதிக்கும்வண்ணம் என் யோக்கியதை இப்பொழுதோர் வழுக்குநிலத்தில் நிற்கின்றதே—கோழையோ, அன்றி யோர் இச்சகனோ (7)—உன்னை யான் காதலித்தேன் என்பது ஓகோ ஸீஸரே, உண்மையே. எனின், உனது ஆன்மா இப்பொழுது எம்மை நோக்குமேல், உன் பகைவர்தம் குருதிசொரியும் விரல்களைப்பற்றிக் குலுக்கினனாய் உன் ஆண்டனி, பெருந்தகாய், உன் சவத்திற்கெதிரிலேயே, சந்திசெய்துகொள்வதைக் காண, உன் மரணத்தினும் அரிதின் வருந்துவதாகாதோ? புண்கள் தாம் நீ யெத்தனை உடையையோ அத்தனைக் கண்கள் எனக்கிருந்து, உன் குருதியை அவைதாம் பெருக்கும் விரைவினில் இவைகளும் கலுழ்ந்து கரையுமேல், அதுவன்றோ, நின் பகைவருடன் கேண்மைமுறையிற் கூடுவதனினும், எனக்குத் தகவுடைத்தாகும். என்னைப் பொறுத்தருள்க ஜூலியஸ்!—வீரம் மிகுந்த மானரசே, இவ்வயின் மடக்கப் பெற்றனை; இவ்வயின் நீ வீழ்ந்தனை. உன் கொள்ளையின் குறியெழுதி (8) உன் னுதிரத்திற் சிவந்தனராய் உன்னை வேட்டையாடிய புளிஞர்கள் இதோ நிற்கின்றனர்—ஓ உலகமே இம் மானிற்கு நீயோர் கானகமா யிருந்தனை; மற்று, இதுதான், உலகமே, உன் இதயமாயிற்று—அரசர்பலர் எய்து வீழ்த்திய வோர் மானிற்கே முற்றிலும் நிகராக இங்கு நீ கிடக்கின்றாய். (9)

காஸ்ஸியஸ்:—மார்க் ஆண்டனி......(10)

ஆண்டனி:—என்னை நீ கேயஸ்காஸ்ஸியஸ், மன்னித்தருள்க; ஸீஸரின் பகைவோரும் இவ்வளவு பகரல்வேண்டும்; மற்று, நட்புடைய ஒருவனுக்கிது இளகாத அடக்கமன்றோ. (11)

காஸ்ஸியஸ்:—இன்னணம் ஸீஸரை நீ புகழ்வதற்கு உன்னை யான் பழிக்கின்றேனல்லேன். மற்று—எம்முடன் எவ்வகை உடன்பட உளங்கொண்டுளாய். எம் நண்பர்தம்எண்ணினில் உன்னையும்புள்ளியிடலாமோ (12); அல்லது உன்னை எதிர்பார்த்தலின்றியே நாங்கள் மேற்செல்வதோ?

ஆண்டனி:—ஆதலாற்றான் உங்கள் கைகளைப்பற்றி ஏற்றனென். எனினும், ஸீஸரைப் பார்த்தலும் குறித்த விடயத்திலிருந்து விலகலாயினேன். உங்களனைவரோடும் நண்பனேயாயிருக்கின்றேன்; உங்களனைவர்மாட்டும் அன்புமுடையேன்; எவ்வண்ணம் எவ்வயின் ஸீஸர் பேரிடர்கள் புரிதற் கிருந்தனன் என்பதற்குரிய காரணங்களை எனக்கு வழங்குவீரென்னும் நம்பிக்கைபற்றியே இந்நட்பிற் கிசைகின்றேனென்பதை நினையுங்கள் (13).

ப்ரூட்டஸ்:—இல்லையேல் (14) இஃதோர் கொடுங் குரூரக் காட்சியே யாகுமென்றோ. நீதான் ஆண்டனி, ஸீஸரின் மைந்தனேயாயினும், அமைதியே காணுமாறவ்வளவு தகவுமிக உடையன எம் காரணங்கள்.

ஆண்டனி:—யான் நாடுவதெல்லாமவ்வளவே. அன்றியும், அவன் உடலத்தைக் கடைத்தெருமருங்குகொணர்ந்து, நண்பனொருவனுக் குரியவோர் கடமை பற்றி, ஈமச்சடங்கு வான்முறையில், மேடையேறி யான் பேசற்கு விடைதந் தருளவேண்டுமென்று உங்களை இரக்கின்றவனாயு மிருக்கின்றேன். (15)

(1) தம்முடைய கட்சியில் ஆண்டனியும் சேரவேண்டுமென்னும் ஆவல் ப்ரூட்டஸ் காஸ்ஸியஸ் முதலானவர்களுக்கு மிக அதிகம். ப்ரூட்டஸ் தன்னுடைய நட்பினை ஆண்டனிக்கு அளித்து அழைக்கின்றான். மாநுட இயற்கையை நுண்ணறிவின் அறிந்திருக்கின்ற காஸ்ஸியஸ்ஸோ ஒருவனைத் தம்கட்சியில் சேர்த்துக்கொள்வதற்கு நட்பினை மாத்திரம் வழங்குவது போதாதென்பது அறிவான். ஒவ்வொருவருக்கும் தனித்தனி ஊட்டுகின்ற ஆசையினாலேயே, என்றும், கட்சியின் கட்டுப்பாடு ஏற்படுகின்றது. ஆகையால், காஸ்ஸியஸ் ஆண்டனியை நோக்கி, "இனி இவ்வரசியலில் ஏற்படும் உத்தியோகங்கள் விடயமாக, உனக்கு வேண்டியதனிலும், உன்னைச் சார்ந்தவர்களுக்குக் கொடுப்பதிலும் எங்களுக்கு நிகரான செல்வாக்கு உனக்கும் இருக்கும்" என்ற ஆசையைக் காட்டுகின்றான்.

(2) நீ மிக்க அறிவாளி என்னும் நிச்சயம் எனக்குளதாதலால் காரணம் தெரியும்முன்னரே நான் உங்களோடு உறவுபூணத் துணிகின்றேன் - என்பது பொருள்.

(3) நட்பிற் கடையாளமாக அவர்கைகளைப்பற்றிக்குலுக்குகின்றான்.

(4) ஸீஸரின்மீது முதற்குத்து ஏவியது காஸ்க்காதான் என்பதை ஆண்டனி கேள்வியுற்றிருக்கின்றான் போலும். ஆகலின் அவனைச் சூரன் என்று வஞ்சப்புகழ்ச்சியா யழைக்கின்றான்.

(5) கடைசியில் நான் உன் கையினைக் கொள்கின்றேனாயினும், அன்பிலே நீ மற்றவர்களுக்குக் குறைந்தவன் என்று எண்ணற்க—என்பது பொருள்.

(6) அவர்களை அழைத்து ஏதோ நட்புரை இயம்பவந்த ஆண்டனி, அதனை நிறுத்தித் தன் வாசகத்தை வேறாக மாற்றித் தன்நிலைமையைத் தெரிவித்துக்கொள்கின்றான்.

(7) ஸீஸரின்பால் அத்துணை அன்புடையவனாயிருந்த நான் இப்பொழுது, அவனைக் கொன்ற உங்களுடன் நட்புக்கொள்ளப் புகுமிது, என்னை இழிவுற மதிக்கும்படி செய்வதற்குரியதேயன்றி வேறன்று. உங்களுக்கு மிகவும் அஞ்சிய கோழையாகிய நான் உயர்பிழைக்கவேனும், அல்லது இப்படி இச்சகம்பாடி வயிறு பிழைக்கவேனும் சூழ்கின்றேனென்று, இவ்விரண்டு வகைகளிலொன்றாகவே மதித்துத் தீர்வீர்கள். அல்லது ஸீஸரின்பால் நான் வைத்திருந்த காதலெல்லாம் பொய்யென்றேனுங் கொள்ளவேண்டும். இப்படி நான் நிற்கும் நிலம் என்னை எப்பக்கத்திலும் வழுக்கித்தள்ளுவதற்கே உரியதாயிருக்கின்றதேயன்றி, என்னை உங்கள் நன்மதிப்பில் நிலைநிறுத்தக் கூடியதாக இல்லையே-என்று சோர்கின்றான் ஆண்டனி.

(8) உன்னைக்கொன்ற பாதகம் அவர் முகத்தில் எழுதியிருப்பதுபோல் விளங்குகின்றது—என்பது பொருள். சாஸனத்திற்குக் கையெழுத்திட்டுச் செவ்வரக்கு முத்திரை வைப்பதைத் தழுவிப் பேசுகின்றான்.

(9) ஸீஸரை ஒரு மானாகவும், இவ்வுலகமடங்கலும் அந்த மான் திரிந்துவந்த கானகமாகவும், அம் மானைத் துரத்தி வேட்டையாடி வீழ்த்திய வேடர்களாக இச்சதியாளர்களையும், ஆண்டனி உருவகம்செய்கின்றான்.

(10) 'என்ன நீ இவ்வாறு எங்களை இழித்துப் பேசுகின்றாய்" என்று தடுப்பவனாய்க் காஸ்ஸியஸ் அவனைக் கூப்பிட்டுத் துவக்குவது இது.

(11) பகைவனாயினும் இவ்வளவு சொல்லி ஸீஸரைப் புகழாமல் இருத்தல் இயலாது. மற்று, நண்பனாகிய நான் இதனோடு நிறுத்தினால், எவ்வளவோ என்னை அடக்கிக் கொள்கின்றேன் என்பது தெரியவில்லையா!. நட்பின் ஆர்வம் அதிகம் இல்லாமையால் என் நெஞ்சம் இதன்மேல் இளகவில்லை என்று ஏசும்படி நிற்கின்றேனே—என்பது பொருள்.

(12) புள்ளியிடுதலாவது, புள்ளிக்குறியிட்டு, அடையாளஞ் செய்துகொள்வது.

(13) அன்பு பேசுகின்றானாயினும் ஆண்டனி மனதில் வன்மமே விஞ்சுகின்றது. எனினும், அவர்களைப்பகைக்கின்றான் என்பதை வெளிப்படையாய்க் காட்டாமலும், அல்லது பயத்தினால் பணிந்து நட்புவேண்டுவதுபோல் தோன்றாமலும் ஆண்டனி மிகவுஞ் சாமர்த்தியமாய் நடந்துகொள்கின்றான். தக்க காரணம் கூறவேண்டுமென்று இவன் வற்புறுத்துவதெல்லாம், அவர்களுக்குத் தான் அஞ்சினவனல்லன் என்பதைத் தோற்றுவித்தற்கன்றி, உண்மையில் அக்காரணங்களைக் கேட்டு அமைதியடையவேண்டும் என்னுங் கருத்துடையதன்று.

(14) இல்லையேல்—தக்க காரணங் கூறவில்லையாயின்.

(15) சவச்சடங்குகள் செய்து ஸீஸரைப் புதைக்குமுன், அவனுடைய சவத்திற்கெதிரே, தான், நண்பனென்னுந் தன்மையில் ஸீஸரின் பிரதாபங்களைப் பற்றியோர் சொற்பொழிவு இயற்றுதற்கு அநுமதி தரவேண்டுமென்று ஆண்டனி கேட்டுக்கொள்கின்றான். இவ்வண்ணம், சனங்களின் மனதைச் சதியாளர்களுக்கு விரோதமாக்கி, ஸீஸருக்குச் சார்பாக மாற்றிக்கொள்ள ஆண்டனி முயல்கின்றான்.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[376-வது பக்கத் தொடர்ச்சி]

V. அருத்தாபத்தி.

(i) அருத்தாபத்தி ஒருவகைப் பிரமாணமா?

சாருவாகர், பிரத்தியட்சமொன்றே * பிரமாணமாகு மென்பர். பிரத்தியட்சத்தையும் அனுமானத்தையும் அங்கீகரித்துள்ள பௌத்தரும் வைசேடிகரும், † பிரத்தியட்சப்பிரமாண மொன்றையே பிரமாணமாகக் கொள்வோமாயின், ‡ திருப்தியை விரும்புகின்ற புருஷனுக்குப்போஜனத்தில் பிரவிர்த்தியுண்டாகல் கூடாது; ஆகையால் சாப்பிடாத போஜனத்தில் திருப்தியுண்டாகு மென்பதற்குப் பிரத்தியட்சப் பிரமாணத்தினால் யாதொரு பிரத்தியட்ச ஞானமுமில்லை. சாப்பிட்ட போஜனத்தின் அனுபவம்சாப்பிடாத போஜனத்திலும் அனுமானத்தினா லுண்டாகின்றமையின் அனுமானப் பிரமாணத்தையும் அங்கீகரிக்கவே வேண்டுமென்பர். இவ்விரண்டுடன் சப்தத்தையு மங்கீகரித்துளர் சாங்கியர் சைவர் முதலியோர். சப்தப் பிராமணத்தை அங்கீகரிக்காவிடத்து, வெளியூர்களினின்று வரும் கடித மூலச் சங்கதிகள், தந்திமூலச் சங்கதிகள் இவற்றில் ஞானமுண்டாக இடமில்லை; மற்று உண்டாதலே பிரசித்தமாயிருக்கின்றது. எனவே ஆப்தவாக்கியம் சப்தப் பிரமாணம்:—

மனிதர் காளிங்கே வம்மோன்று சோல்லுகேன்
கனிதந் தாற்கனி யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழ லீசனெ னுங்கனி
யினிது சாலவு மேகற்ற வர்கட்கே.

தனித் திருக்குறுந்தொகை 7.

மேற்கூறிய மூன்று பிரமாணங்களுடன் நையாயிகர் உவமானத்தையும் ஒன்ருய்ச் சேர்த்து அங்கீகரிப்பர். ஆமாவினை (காட்டுப் பசுவை) பாராத ஒருவன் வனசஞ்சாரியால், ஆமா ஆவை யொக்கும் என்று கேள்விப்பட்ட பின்னர், வனத்திற்சென்று ஆமாவைக் காணும்போது அவ்வனசரன் கூறியவாக்கியமும் அதன் பொருளும் நினைவில் வருகின்றன. அந்த ஸ்மரணைக்குப் பின்னர் அவனுக்கு இது ஆமா என்னும் ஞானமுண்டாகின்றது. உவமானப் பிரமாணத்தை அங்கீகரிக்காத விடத்து இஞ்ஞானம் உண்டாகுதல்கூடாதாதலின் உவமானப்பிரமாணத்தையும் அங்கீகரித்தல் வேண்டு மென்பர்.

தில்லைச்சிற் றம்பலமும் செம்பொன் பள்ளி
தேவன்குடி சிராப்பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவ முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லிற் றிகழ்சீ ரார்கா ளத்தியும்
கயிலாய நாதனையே காண லாமே.

க்ஷேத்திரக் கோவைத் திருத்தாண்டகம் 1.

எனவே பித்திபட்ச முதலிய நான்குபிரமாணங்களும் அங்கீகரித்தற் குரியனவென்பர்.

இஃது இவ்வாறாக, மீமாம்சகருள் ஏகதேசியான பிரபாகரர், அருத்தாபத்திப் பிரமாணத்தையும் அங்கீகரித்திருக்கின்றனர். ஆனல் அது அங்கீகரிக்கப்பாலதோவெனின், முன்னர் அநுமானப் பிரமாணத்தில் காட்டப்பட்ட கேவலவியதிரேகி அநுமானப் பிரமாணத்தில் அருத்தாபத்தியென்பது ஒரு உட்பிரிவாதலால், இதைத் தனிப் பிரமாணமாய்க்காட்ட நீதியில்லை. மீமாம்சகருள் மற்றொரு ஏகதேசியான பட்டரும் வேதாந்திகளும் மேற்கூறிய ஐந்து பிரமாணங்களுடன் அனுபலத்திப் பிரமாணத்தையு மங்கீகரித்திருக்கின்றனர். ஆராயப்புகின் அது, பிரத்தியட்சப்பிரமாணத்தின் ஓர் உட்பிரிவாய்க் காணப்படுதலால் அதைத் தனிப் பிரமாணமாகக் கொள்ளல் பொருந்தாது. அனுபலத்தியைப் பின்னர் விவரமாய்க் காண்போம்.

பௌராணிகர் மேற்கூறிய ஆறுபிரமாணங்களுடன், ஒழிபு (பரிசேஷம்), உண்மை (சம்பவம்), வழக்கம் (ஐதீகம்), இயல்பு (சுபாவம்), என்னும் நான்கு பிரமாணங்களையும் அங்கீகரிப்பர்.

ஒழிபு என்பது:—

சீரோழி பென்று சேப்பப் படுவது திண்புவிமேற்
போராடி நின்று பொருதா ரிருவர்தம் போர்க்களத்துப்
பாரா ரிகாவன் வேன்ரு னெனிற்றன் பரிசழிந்து
நேரா மிராவணன் ரேற்றசோல் லாகி நிகழ்வதுவே.

(தேவார உதாரணம்)

விரியுந் தண்ணிள வேனிலில் வெண்பிறை
புரியுங் காமனை வேவப் புருவமுந்
திரியு மெல்லையில் மும்மதில் தீயெழுந்
தெரிய நோக்கிய வின்னம்ப ரீசனே.

திருவின்னம்பர் - திருக்குறுந்தொகை 9.

உண்மை யேன்பது:—

துயக்கற வுண்மை யேனநா வலர்கள் துணிந்துரைப்ப
தியற்கைப்பொருளினையிற்றெனலாமிதுதா னுரைக்கின்
வியக்குற்ற கால்சலிக்குந் தீச் சுடுவிய நீர்குளிரும்
வயக்குற்ற மண்வலிதென்று பட்டாங்கு வழங்குவதே

(தேவார உதாரணம்)

பூதப் படையுடையார் பொங்கு நூலார்
புலித்தோ லுடையினார் போரேற் றினார்
வேதத் தொழிலார் விரும்ப நின்றார்
விரிசடைமேல் வெண்டிங்கள் கண்ணி சூடி

* "குண்டரே சமணர் புத்தர் குறியறியாது நின்று
கண்டதே கருது வார்கள்".

† விடையான் விரும்பியென் னுள்ளத் திருந்தா னினிநமக்
கடையா வவலம் அருவினை சாரா நமனையஞ்சோம் [கிங்
புடையார்கமலத் தயன்போல் பவர்பா திரிப்புலியூர்
உடையா னடியா ரடியடி யோங்கட் கரியதுண்டே.

திருப்பா திரிப்புலியூர் - திருவிருத்தம் 3.

‡ விரிக்கு மரும்பதம் வேதங்க ளோது விழுமியநால்
உரைக்கி லரும்போரு ளுள்ளுவர் கேட்கி லுலகமுற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள் பாடக் கழுமலவன்
நிருத்தம் பழம்படி யாடுங் கழல்நம்மை யாள்வனவே.

திருக்கழுமலம் - திருவிருத்தம் 4.

ஓதத் தொலிகடல்வாய் நஞ்ச முண்டா
ரும்பரோ டம்பொன் னுலக மாண்டு
பாதத் தொடுகழலார் பைங்க ணேற்றார்
பலியேற்றார் பந்தண நல்லூ ராரே.

திருப் பந்தணநல்லூர் - திருத்தாண்டகம் 3.

வழக்கம் அல்லது ஐதீகம்:—

கொன்பயில் வேலைக் கடல்புடை சூழுங்குவலபத்தோ
ரன்புடனுலி லலகையுண் டென்பர்க ளென்பதுவு
மின்பயில் புற்றில் விடநாக முண்டென்ப ரென்பதுவு
மென்பர்க ளுவல ரென்பது மைதிக மென்பர்களே

(தேவார உதாரணம்)

பேய்வ னத்தமர் வானைப் பிரார்த்தித்தார்க்
கீவ னையிமை யோர்முடி தன்னடிச்
சாய்வ னைச்சல வார்கள் தமக்குடல்
சீவ னைச்சிவ னைச்சிந்தி யார்களே.

ஆதிபுராணத் திருக்குறுந்தொகை 6.

புற்றி லாடர வோடு புனல்மதி
தெற்று செஞ்சடைத் தேவர்பி ரான்பதி
சுற்று மாடங்கள் சூழ்திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க் குப்பாவ மில்லையே.

திருவாஞ்சியத் திருக்குறுந்தொகை 3.

இயல்பு:—

மாமேலிருந்தொருகோறுவெனிற்சுள்ளிக்கோல்தரலும்
சோமேலிருந்தொருகோறுவெனிற்றரவேதுணிந்து
பூமேவுகண்ணமுத்தங்கோல்கொடுத்தலுபூதலத்தே
நாமேவியல்பெனக்கூறுவர் நல்லசொன்னவலரே

தேவார உதாரணம்.

இயல்பாய ஈசனை யெந்தை தந்தை
யென்சிந்தை மேவி யுறைகின் றானை
முயல்வானை மூர்த்தியைத் தீர்த்த மான
தியம்பகன் திரிசூலத் தன்ன கையன்
கயல்பாயும் கண்டல்சூழ் வுண்ட வேலிக்
கழிப்பாலை மேய கபாலப் பனார்
மயலாய மாயக் குரம்பை நீங்க
வழிவைத்தார்க் கவ்வழியே போது நாமே

திருக்கழிப்பாலை - திருத்தாண்டகம் 8.

இந் நான்கு பிரமாணங்களுள் பரிசேஷமும், (ஒழிவு) சம்பவமும் (உண்மை), சுபாவமும் (இயல்பு) அனுமானத்தினுளடங்கும். ஐதீகம் சப்தப்பிரமாணத்தில் அடங்கும். ஆகையால் இவற்றைத் தனிப் பிரமாணங்களாகக் கொள்ளுதல் பொருந்தாது.

சேஷ்டைகளாகிய கையசைத்தல் முதலியன சப்தப் பிரமாணத்தின் வாயிலாகவாவது அநுமானப் பிரமாணத்தின் வாயிலாகவாது விவகாரத்திற்கு ஏதுவாயிருக்கும். ஆதலால் அதுவும் வேறு பிரமாணமன்று. எனவே மேற்கூறிய பிரமாணங்கள் உபசார வழக்கில் பிரமாணமென்னலாமன்றித் தர்க்கமுறையில் ஆராய்ச்சியில் வரும் ஆட்சேபங்களுக்குச் சமாதானம் சொல்ல இடமில்லை. ஆகையால் அருத்தாபத்தி ஒரு பிரமாணமன்று. பிரமையின் கரணமே இதற்குப் பிரமாணமாகும்.

(ii) அருத்தாபத்தியின் இலக்கணம்.

அருத்தாபத்தியென்பது, கண்ட விஷயங்களினின்று காணுததோர் செய்கை திண்ணமென்னும் முடிவு செய்தல். பகலில் உண்ணுதவனது பருமை இரவு உண்டாலன்றிக் கூடாது என்னும் துணிபு. அர்த்தாபத்தியென்னும் வடமொழிச்சொல்லை அர்த்தஸ்ய ஆபத்தி யெனப் பிரிப்பர். அதன் பொருள், அர்த்தத்தின் கற்பனை என்பதாம். அர்த்தம் என்பது உபபாதக வஸ்து; ஆபத்தி-கற்பித்தல். தேவாரத்தில் சப்தப்பிரமாணரூபத்தில் அருத்தாபத்தியைக் காணலாகும்.

பாதந் தனிப்பார்மேல் வைத்த பாதர்
பாதாள மேழுருவப் பாய்ந்த பாதர்
ஏதப்படா வண்ண நின்ற பாத
ரேழுலக மெல்லா மோடுங்கியபின்
வேதத்தோலி கோண்டு வீணை கேட்பார்
வெண்காடு மேவிய விகிர்த னாரே.

திருவெண்காடு - திருத்தாண்டகம் 2.

உபபாதக கற்பனைக்கு ஏதுவாயிருக்கின்ற உபபாத்தியஞானம் அர்த்தாபத்திப்பிரமாணமாகும். உபபாதக ஞானம் அருத்தாபத்திப் பிரமையாம். யாதின்றி யாது சம்பவியாதோ, அதை உபபாத்தியம் அல்லது சம்பாத்திய மெனக் கூறுவார். இராஜ போஜனமின்றிப் பகற்பொழுது உண்ணுது ஒழிந்த ஒரு புருடனிடத்துப் பருமை சம்பவியாமையின், பருமை இராஜ போஜனத்திற்கு உபபாத்திய மெனப்படும். யாதொன்றின் அபாவத்தால் யாதொன்றின் அபாவ முண்டாகின்றதோ அது உபபாதகமெனப்படும். இராஜபோஜனத்தின் அபாவத்தால் பகற்பொழுது உண்ணுத ஒருவனுக்குப் பருமை சம்பவியாமையின் இராஜபோஜனம் பருமையின் உபபாதகமாம். (உ-ம்)

நரிபுரி சுடலைதன்னி னடமலா னவிற்ற லில்லைச்
சுரிபுரி குழலி யோடுந் துணையலா லிருக்கை யில்லை
தெரிபுரி சிந்தை யார்க்குத் தெளிவலா லருளு மில்லை
யரிபுரி மலர்கொண் டேத்து மையனை யாற னார்க்கே.

திருவையாறு - பண் - திருநேரிசை 3.

நசுவரன் இருப்பதை அறிந்திடுவதற்கு இயற்கைச் சக்தியான மூலாதாரம் (உமாதேவி வடிவாய்த்) திகழ்ந்தாலன்றி யறியொணுதாதலால் ஈச்வரகற்பனையாகும் ஞானம், இயற்கைச் சக்தியின் அருத்தாபத்தியாகும்.

அருத்தாபத்தி வியாபாரமின்றிய காரணமாதலால் அது, காண்டல் கருதலென்னும் இருவகையிலடங்கும். இவற்றை வடமொழியில் திருஷ்டம் சுருதம் எனக் கூறுவர். கீழே காணும் தேவாரப் பாசுரத்தில் கருதல் காண்டலென்னும் தன்மைகளை அருத்தாபத்தி இலக்கணம்குறிப்பிடுமாறு அப்பர்பாடுவது காண்க:—

காண்டலே கருத்தா நினைந்
திருந்தேன் மனம்புகுந்தாய் கழலடி
பூண்டுகொண் டொழிந்தேன்
* புறம்போயினு லறையோ?
வீண்டு மாடங்கணீண்ட மாளிகைமே
லெழுகொடி வானிளம்மதி
தீண்டி வந்துலவும்
திருவாரூ ரம்மானே.

திருவாரூர் - பண் - சோமரம் 1.

[* புறம்போயிருத்தலைக் கற்பித்தல் சுருதார்த்தப் பிரமையெனப்படும்.]

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—5. சூர்ப்பணகைப் படலம்.

[373-வது பக்கத் தொடர்ச்சி]

முனிவரின் விலகிய கலேஞரி னருமை.

நவ்விவிழி பெற்றவிவள் நெஞ்சினுறைவது நஞ்சேயாயினும், நாவில் நயமுடன் சுரப்பது பசுநறுந்தேனே. உறைபதியும் உறுபெயரும் உறவோரும் யாவரென விஞவிய இராமனுக்கிவ் வரக்கி,

பூவிலோன் புதல்வன் மைந்தன்
புதல்விமுப் புரங்கள் செற்ற
சேவலோன் றுணைவ னான
செங்கையோன் றங்கை திக்கின்
மாவெலாந் தொலேத்து வெள்ளி
மலேயெடுத் துலக மூன்றுங்
காவலோன் பின்னை காம
வல்லியாங் கன்னி யென்றாள்.

[தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனது புத்திரனுகிய புலஸ்த்தியனுடை மகனுகிய விச்ரவசுவின்மகள்; திரிபுரங்களை எரித்தவனும் விருஷபவாகனனுமான சிவபிரானது நண்பனுகிய சிவந்த கைகளையுடைய குபேரனுக்குத் தங்கை; திக்கஜங்களை எல்லாம் வென்று, கைலாயமலையைப் பெயர்த்து, மூன்றுஉலகங்களையும் ஆள்கின்ற இராவணனுக்குப் பின்பிறந்தவள்; காமவல்லி என்னும் பெயருடையை ஓர் கன்னி யாவேன்—என்றாள்]

தன்னை இதனினும் அதிகம் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ளும் வாசகமொன்று இலக்கிய மடங்கலுந் தேடினுங் காண்டலரிது. உயர்குடிப் பிறப்பும் உடன்பிறந்தோர் சிறப்புங் கூறி இராமனை அங்ஙனே பிரமிக்கச் செய்துவிட வேண்டுமென முயல்கின்றாள் இப் புனைவேட வல்லரக்கி. இவள் புனைந்துகொண்ட வேடத்தால் மாத்திரமன்றிப் புனைந்துரைத்த தன் பெயரினுலு மிராகவன் மனத்தில் மயலூட்ட முன்னினுள். யாவரேயாயினும் ஆடவர்தாம் மடவாரைக் காமமுடன் நண்ணுங்கால் தம்நிலை யிழிந்து தாழ்கின்றார், எனக் காமத்தின் நுண்ணிய திறமெல்லாம் நுணித்துணர்ந்த ஹாவலக் எல்லிஸ் (Havelock Ellis) கூறுகின்றார். இதனுண்மையைப் பின்னர் இராவணன் சீதையை அணுகுஞ் செவ்வியிற் பெரிது காணலாம். இதற்கு எதிர்நிலையாய், பெண்ணொருத்தி ஆண்மகனை மேவிவருந் தன்மையைக் கம்பரிங்குக் கட்டுரைக்குஞ் செவ்வி கருதற்பாலது. துணிவது பெண்ணயின் அவள் தகைமை முன்னினும் அதிகமாய் உயர்ந்து பொலிகின்றது. புதியதோர் ஆற்றலும் அழகும் பெருமையும் பெறுகின்றாள். ஆங்கிலப் பெருங்கவி ஷேக்ஸ்பியர் நாடகங்களின் பயிற்சியுடையவர் தம் நினைவினில், எகிப்ததேயத்துப் பொய்ம்மாயப் பேரழகி க்ளியபாட்ராவை நச்சிச்சார்ந்த வீரன் மார்க் ஆண்டனி பெருமைகுறைந்த பெற்றியனுய்த் தீர்ந்த விதங்களெல்லாந் திரண்டெழும். இதற்கெதிர் காதற்சூழ்ச்சியைத் தாமே கைக்கொண்டு கருமம் புகுந்த ஜூலியட், ஜெஸ்ஸிக்கா, ரோஸலிண்ட் அனைய மாதர் தத்தங் காதலர்களை நண்ணுந்தோறும், அவரவர் மொழியும் இயற்கையும், நயப்மிகுந்து தோன்றுமாறு நாடகத்திறம் நன்கறிந்த ஷேக்ஸ்பியரால் நிகழ்த்தப் பெற்றிருக்கும் உண்மையும் உதிக்கும். கம்பருடைய கலையுணர்வும் இதனை உய்த்துணர்ந்தது. ஆதலால், வான்மீகி முனிவருக்கு இச்செவ்வியில் வந்தனைகள் புரிந்து வழியனுப்பிவிட்டுத் தனக்கே யுரியவத் தனிப்பெரும் நாடகக் காட்சியோடு சூர்ப்பணகையைக் கம்பர் நலமுற நவிற்றிவைக்கின்றார்.

வேட்கை கைம்மிக முனைந்து முதல் நண்ணுவார் ஆண்பாலராயின் இழிவாரென்றும் பெண்பாலராயின் உயர்வுற நடிப்பாரென்றும் இங்கு இயம்பப் பெற்றிருக்கின்றதேயன்றி, அன்னவர்கள்தம் நாட்டத்திற்கிலக்காகிய மறுபாலார் உயர்வதேனும் தாழ்வதேனும் நிகழ்தல் வேண்டுமெனும் நியதியொன்றுங் குறித்த பரிசில்லை. ஆதலின், சூர்ப்பணகை சீர்மைசிறக்க நடிக்கின்றனளாயினும், தன்வயஞ் சிறிதுந் துறந்திலனுகி,

அவ்வுரை கேட்ட வீர
னையுறு மனத்தான் செய்கை
செவ்விதன் றறித லாகுஞ்
சிறிதினென் றுணரச் செங்கண்
வெவ்வுரு வமைந்தோன் றங்கை
யென்றது மெய்ம்மை யாயி
னிவ்வுரு வியைந்த தன்மை
யியம்புதி யியல்பி னென்றான்

[அவ்வார்த்தைகளைக்கேட்ட இராமன், சந்தேகங்கொண்ட மனத்தினனுகி, இவள் செய்கை செம்மையாயிருக்காதென்பது சிறிதுநேரத்தில் தெரியவரும் என உணர்ந்து, "சிவந்த கண்களையும் பயங்கரமான உருவத்தையும் உடைய இராவணனது தங்கை நீ என்று கூறியது உண்மையாயின், அரக்கியாயல்லாமல் இவ் வழகியவடிவம் நீ அடைந்தது எங்ஙனம் என்பதைத் தக்கபடி கூறுவாய்"—என்றான்]

'மெய்ம்மையாயின் இயல்பில் இயம்புதி' எனத் தகைந்திவன் கேட்கின்றவிக் குரலினூடே, இராமன் தன்வயந்துறந் திழிந்திலனென்னுந் தன்மை தொனிக்கின்றது. இவ்வடிவம் தனக் கமைந்ததற்கோர் தகுதியைப் புனைந்துரைக்குஞ் சூழ்ச்சி சூர்ப்பணகைக் கருமையன்று. எனினும், தன்னைக்கண்டும், தன் பிறப்புணர்ந்தும், தன் குரலொடு குலவியபெயரின் நலமது கேட்டும், மொழி வழுவழுக்கக் குழைந்து குறுகாமல் இராகவன் விலகிநின் றேவியஇவ் வினவைக் கேட்டவளவில், காமத்தால் கண்முழுது மவிந்திராத் தெரிவை வேறெவனும் இனித்தன் சொல்லெதுவு மிவன்பாற் செல்லா தென்பதைத் தேர்ந்தவளாய்ச் சோர்ந்திருப்பாள். இந்தக் காமவல்லிக்கோ அறிவிலும் வேட்கையே அதிகமாய் வாகைகொண்டது. ஆதலின்,

தூயவன் பணியா முன்னஞ்
சொல்லுவாள் சோர்வி லாளம்
மாயவல் லரக்க ரோடும்
வாழ்வினை மதிக்க லாதேன்
ஆய்வுறு மனத்தே னுகி
யறந்தலை நிற்ப தானேன்
தீவினை தீய நோற்றுத்
தேவரிற் பெற்ற தென்றாள்.

[தன்வயந்துறந்து தாழ்மை யடையாத தூயவனுகிய இராமன், இவ்வண்ணம் கட்டளையிட்டவுடன், தன் எண்ணம் இனிக் கைகூடாதென்று தளரவேண்டிய சூர்ப்பணகையோ தளர்வென்பது சிறிதும் அடையாமல், இராமனுக்குப் பதில் சொல்வாளாகி, "வஞ்சனை மிகுந்த கொடிய அரக்கருடன் வாழ இசையாதவளாகி, நன்மை தீமைகளை என் மனத்தினுல் பகுத்தறியத்தலைப்பட்டு, தருமநெறியிலே நிற்கின்றவளாகிய நான், என்னுடைய பாவங்களெல்லாம் பொசுங்கும்படி தவஞ்செய்து, தேவர்களின் வரத்தால் பெற்றதாகும் இவ்வழகிய வடிவம்" என்றாள்]

இம்மொழிகளால் இராமனுக்கறிவுறுத்தற்குரியன யாவும் இயம்பிவிட்டாளாயினும், மதியின் கூர்மை மிக்க இவ்வண்ணல் அவளுரைத்த அமைதியி னுண்மையைச் சோதிப்பான் வேண்டி மீண்டும்,

இமையவர்தலைவனேயுமெண்மையிலேவல்செய்யு
மமைதியி னுலகமூன் றுமாள்பவன் றங்கையாயிற்
சுமையுறசெல்வத்தோடுந்தோன் றலேதுணையுமின்றித்
தமியைநீவருதற்கொத்ததன்மையென்றைய
[லென்றான்.

[அழகிய மாதே, இந்திரனும் எளியனுய்க் குற்றேவல் செய்யும்படி எல்லா உலகங்களையும் ஆள்கின்ற இராவணனது தங்கை நீயாகில்—மிகுந்த செல்வத்துடன் வராமல், துணையுமின்றித் தனிமையாய் நீ இங்கு வரநேர்ந்தது எவ்வாறு"—என்றான்]

இவ் வையத்தி னமைதி, "மாயவல் லாக்கரோடும் வாழ்வினை மதிக்கலாதேன்" என்றிவள் முன் விளம்பிய மாற்றத்திலேயே யடங்கியிருக்கின்றதாயினும், வேறோர் வகையில் அச்செய்தியையே மீண்டுங்கேட்டு, மறுமுறை கூறுங்கா லவ்வுரை மாறுபடுகின்றதோ என ஆராயப்புகுந்த பரிசு இதுவென மதித்தல்வேண்டும். எனினுந் தையலவ ளிதற்குந் தளர்ந்திலள்.

வீரநீ துறைத்த லோடு மெய்யிலாள் விமல யானச்
சீரிய ரல்லார் மாட்டுச் சேர்கிலேன் றேவர் பாலு
மாரியமுனிவர் பாலுமடைந்தனெனிறைவவிண்டோர்
காரிய முண்மை நின்னைக் காணிய வந்தே னென்றாள்.

[வீரனுகிய இராமன் அவ்வாறுகூற, மெய்ம்மையில்லாதவளாகிய சூர்ப்பணகை "தூயவனே, சீர்மையில்லாத அவ்வரக்கர்களுடன் சேராமல், தேவர்களோடும் சிறந்த முனிவர்களிடத்தும் சேர்ந்துவாழ்கின்றேன். தலைவனே, இங்கு உன்னிடத்தில் ஓர் காரியம் ஆகவேண்டியிருத்தலினு உன்னைக் காணவந்தேன்"—என்றாள்]

எனின், அப்பொய்ம்மாயப் பெருங்கள்ளி, இராமனது மறுவினவினுலும் மடக்கப்பெற்றிலள். முன்னைப்போன்றே, "சீரிய ரல்லார்மாட்டுச் சேர்கிலேன்" என ஒற்றுமைப்படச் சாதித்தது மன்றி, காரியம் மேலொன் றிருக்கின்ற தென்பதையுங் கழறத் துணிந்தனள். இவள்கருதிய காரியம் எதுவேயாயினும், மூக்கினை உகுத்து இவள் மீள அந் நாசியின் நுனியுடன் அரக்கர் குல மூலமே அழிவதற்கிருக்கின்ற அக்காரியத்திற்குக் காரணமாயிருந்தவை அவ்வரக்கர்தாம் இழைத்திருந்த கொடுமைகளே என்பதைக் கம்பர், முன்னரே, "வெய்யதோர் காரணம் உண்மை மேயினள்" என்னுங் குறிப்பினுற் கூறி இவளைக் களத்தினுள் கொண்டுவந்திருக்கின்றார். காரண காரிய மிவையிரண்டும் இராமனு மறிவான். ஆயினும் யாது மறியாதான்போல் கொண்ட கோலத்திற் கேற்ப,

அன்னவ ளுரைத்த லோடு
மையனு மறிதற் கொவ்வா
நன்னுதன் மகளிர் சிந்தை
நன்னெறிப் பால வல்ல
பின்னிது தெரியு மென்னுப்
பெய்வளைத் தோளி யென்பா
லென்னைகா ரியத்தை சொல்லஃ
தியையுமே லிழைப்ப லென்றான்.

[அவள் அப்படிச் சொல்லவும், நல்லநெற்றியையுடைய மாதர்களது உட்கருத்தை எளிதில் தெரிந்துகொள்ள இயலாது. எனினும் இவள் எண்ணம் இப்பொழுது நல்லவழியிற் செல்லவில்லை என்பது நிச்சயம். பின்னர்த்தெரியும் என்று தன்னுள் எண்ணிக்கொண்டு, அவளைநோக்கி, வளையல்கள் அணிந்த தோள்களையுடையவளே, என்னிடத்தில் உனக்கிருக்கும் காரியம் என்ன, சொல். என்னுல் செய்யக்கூடியதாயின், செய்வேன்—என்றான்]

"நன்னுதல் மகளிர் சிந்தை நன்னெறிப்பால வல்ல'! என்னுமிப்பொது விலக்கணத்தில் மதிவைத்துப் பேசுமிது மரபு பற்றியோ மற்றுத்தன் அநுபவப்பயனுலேயோ அறிகிலேம். இனி, "அறிதற்கொவ்வா நன்னுதன் மகளிர்" எனச்சேர்த்து, "அறிதற் கொவ்வா" என்பதை மகளிர்க்கு இயற்கையடை மொழியாகும்படி பொருள் கொண்டால் மடவார்க்குரிய மதிப்புப் பின்னுமொருபடி குறைதல்வேண்டும். கைகேசியின் மகனென்ற ஒன்றே இராமனை இம்முடிவிற்குத் தூண்டுதற்கமையாது. அன்னையேல், உலகெலாமீன்ற பொன்னையே யனைய கோசலை, மனைவியேல் பெரும் புகழ்ச்சனகி, இன்னவர்க்கிடையிருந்து வாழ்ந்தறிந்த இராமனோவிவ் வாசகம் இயம்புவது. மற்று, கூனியுமுளளென்றுலோ—கூனி எவ்வளவு; உண்டை வில்லுதைப்பதற்கல்லால், அவ்வளைந்த யாக்கை இவ்வள்ளல்தன் திருவுள்ளத்திற் கொள்ளப்பற்றுமோ!

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோஜனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலகதைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

கவனிக்க "சத்வைத்யசாலை" நஞ்சன்கூடு ஏமாறுதீர்
யுனெடெட் ஸோல் ஏஜண்டு: கன்ஸர்ன், மதுரை.

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து 15 நாட்களுக்கு ரூ. 2-0-0.

டிப்போ: பம்பாய். கல்கத்தா.
"நஞ்சன்கூடுபல்பொடி"
சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) மட. 61, மெடிகேடட் டப்பி
பிராஞ்சு: மதுரை. காஞ்சீபுரம்.

கலாநிலயச் சொல்லூ டாட்டம். 2.

இடம்—வலம்

1. சென்னையில் பிரசுரமாகும் ஒரு சிறந்த தமிழ் வாரப் பத்திரிகை
5. நூதனம்
7. புசித்து
8. இரப்பவன்
10. மாமியார் வீடு
12. பூமி
15. மேலெழுதல்
16. ஐம்பொறிகளிலொன்
18. பெருஞ்செல்வம் [று
19. சூரியன்
21. தூய்மை
22. விதை
24. செருக்கு
25. பேய்த்தேர்
26. ஆசையை உணர்த்தும் ஓர் இடைச்சொல்
27. ஆண்மான்
28. வயிறு

1	2	3		4	■	5	6	
7			■	8	9			■
■	10		11			■	12	13
14	■	15					■	
16	17	■		■		■	18	
■	19	20				■		■
21				■	■	22		23
24			■	25				
26		■	27		■	28		

மேல்—கீழ்

1. ஆறு
2. உறுதி
3. வழுக்கி
4. தன்னலங் கருதாமல் பிறர்பொருட்டு உதவல்
5. நுழைய
6. வருத்தம்
9. ஓர் அசுரன்
11. மாசு
13. பகுபத உறுப்பு
14. நுழையாத
17. புகழ்தல்
18. காரணம்
20. காற்று
21. சகரர்களுடைய அன்
22. தந்திரம் [னை
23. யானை
25. பருவதம்

கடைசிநாள் :—1932 வருடம், ஜூன் மாதம், 6 தேதி

இதற்குப் பிழையற நேரான விடை யனுப்புவார்க்கு, கலா நிலயம், 1928-வது அல்லது 1930-வது அல்லது 31-வது வருட ஆப்லெதர்—கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று வெகுமதி யளிக்கப்படும். அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் சந்தாத் தொகையின்றி நம் பத்திரிகையை ஒரு வருடம் இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம். இது அவர் இஷ்டத்தைப் பொருந்தியது.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். ஒருவரே, பல விடைகள் முயன்று, வேறு வேறு அனுப்பினும் அனுப்பலாம். ஆனால், ஒவ்வொன்றிற்கும் 4 அணா தபால் தலை யனுப்ப வேண்டும்.

இலங்கை வாசிகள், அவ்வூர்த் தபால் தலைகள் 25 சதம் அனுப்பினாலும் ஏற்றுக் கோள்ளப்படும்.

3. விடைகள், எம்முடைய காரியாலயத்திற்கு, அடுத்த ஜூன்மாதம் 6-வக்குள் வந்து சேர்ந்துவிட வேண்டும்.

4. வந்த விடைகளில் ஒன்றுமட்டுமே பிழையில்லாது நேரா யிருக்குமாயின் அதனை அனுப்பியவருக்கு முன்னுரைத்தபடி பரிசளிக்கப்படும். நேரிய விடைகள் ஒன்றிற்கு மேற்படுமாயின், அதனை அனுப்பியவர்களின் பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு, யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கே அளிக்கப்படும்.

5. விடையின் நேர்மையும் மற்ற விடயங்களையும் பற்றி மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. அதனைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில், நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

7. விடைகள், பேர், மேல்விலாசம் வேண்டிற பரிசு, முதலியன தெளிவாய் எழுதப்படல் வேண்டும்.

விடைகளை, மானேஜர், கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.

என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

கலாநிலயச் சொல்லூடாட்டம் நம்பர் 1. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—(1) வாசவன், (4) ஆமா, (7) கிரம், (8) மாவிந்தம், (10) சம்புமாலி, (12) திரு. (13) தனிமை, (15) மறை, (16) நகர், (18) திறன், (19) பட்டு, (20) கலி, (22) சுபக்கம், (23) கடல், (24) பலகை, (25) பகடு, (26) தின், (27) களி. (28) குடர்.

மேல்—கீழ்:—(1) வாகீசர், (2) சாம், (3) வம்பு, (4) ஆவி, (5) மாந்தி (6) அழகிய, (8) மாலினி (9) தருமன், (11) மாதர், (14) மைதிலி, (16) நட்பலன் (17) கடுக்கை, (19) பசுபதி, (20) கம்பளி, (21) மல்லர் (23) கடுகு.

நேரியவிடை யனுப்பிவர்:—(1) R. கிருஷ்ணமூர்த்தி, கோயமுத்தூர், (2) V. முத்துக்குமாரசாமி செட்டியார், சென்னை, (3) U. M. துரைசாமி பிள்ளை, சென்னை, (4) இ. ரா. தியாகராஜன், காயாமொழி (5) கெ. வெங்கிடசாமி செட்டியார், வி. புதூர், (6) சி. கந்தையா, மன்னார், (7) வி. சரவணமுத்து, மன்னார் (8) விநாசித்தம்பி கேஸ்டஸ் (9) K. A. ஷண்முகம் செட்டியார், திருப்பத்தூர், (10) ஜான் செல்லையா, சென்னை, (11) C. ராஜாராம் பிள்ளை, சென்னை, (12) S. பட்டம்மாள், சென்னை, (13) V. கோவிந்தசாமி, கனகம்பாளையம், (14) C. திருஞானசம்பந்தன், உக்கிரன்கோட்டை—இந்நண்பர்களில் சீட்டுக்குலுக்கிப் போடப் பெயர்வந்து பரிசுபெற்றவர், ஸ்ரீமான் இ. ரா தியாகராஜன். காயாமொழி.

வர்த்தமானம்

பெஸண்ட் அம்மையார் உபதேசம்:-1931-ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் கூடிய 56-வது வருட பிரம்மஞான சபைக் கூட்டத்தில் அன்னிபெஸண்டு அம்மையார் நிகழ்த்திய பிரசங்கச் சுருக்கம் வருமாறு:—

எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் பிரம்மஞான உண்மை வாழ்க்கையில் பொருந்தி வாழ்கின்றீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு உங்களது உயரிய உடலை உபயோகிக்குந்திறமையை நீங்கள் அடைவீர்கள். பிரம்மஞான உண்மையோடு இயைந்த உங்கள் வாழ்க்கையின் அளவு, உயரிய கருத்து மக்களிடையே பரவும். 'நான் நன்கு கற்கவில்லை' என்ற காரணத்தினாலாவது 'நான் பிறநாட்டு மொழிகளை அறியாதிருக்கின்றேன்' என்ற காரணத்தினாலாவதுமக்களிடத்தில்தன்னலச்சார்பிலா உயரிய கருத்துக்களைப் பரவச்செய்ய முடியாதென்று எவரும்திகைக்கவேண்டா. வாழ்க்கை சீரியதாயிருக்குமேல் உறுதியாய் உங்கள் உயர்ந்தகருத்துக்கள் மக்களைச் சென்று சாரும்.

நீங்கள் ஒரு அன்பான செயலைச் செய்தால் மக்கள் அதை அறிந்துகொள்வார்கள். இச்செயல் அன்பான செயலென்று வாயினாற் சொல்லத் தேவையில்லை. ஒருவருடைய பேச்சு எப்படியிருந்தாலென்ன. செயல்களே பயன் தருவனவாகும். நீங்கள் ஒரு சிறந்த கருத்தைப் பற்றிக்கொண்டு அவ்வழி வாழ்வீரேல் அக்கருத்து உங்கள் சொல்லின் உதவியின்றி உங்களைச் சுற்றியுள மக்களிடத்தில் வேரூன்றிவிடும்.

இப்பொழுது மாந்தரிடம் தன்னம்பிக்கை யில்லை. உங்களை நீங்களே நம்ப அஞ்சுகின்றீர்கள். வாழ்க்கையில் அஃதோர் பெரிய குறையாகும். எவ்வளவுக்கெவ்வளவு நீங்கள் ஆழ்ந்து கருதுகின்றீர்களோ அவ்வளவுக்கவ்வளவு உங்களை நீங்கள் நம்பக் கற்றுக்கொள்வீர்கள். ஒவ்வொருவரும் தங்களால் இயன்றதை மக்களின் பொதுநல வாழ்விற்கு உதவுங்கள். ரோஜாப்பூ தன்னழகை அருகாமையிலிருப்பவர்களுக்குக் காட்டுவதோடமையாது எப்படித் தன்மணத்தைவெகுதூரம் வீசுகின்றதோ அதேபோல், உங்களது ஒழுக்கமுடைமை வாழ்க்கை உங்களைச் சுற்றியெங்கும் பரவும்படி செய்வீர்களாக.

மனிதன் ஒவ்வொருவனிடத்திலும்கடவுள்தன்மையிருக்கின்றது. அத் தெய்வத்தன்மையை ஒவ்வொருவனும் அறிந்துகொள்ளவேண்டும். அத்தன்மையைத் தெரிந்து கொள்வதிலேதான் உங்கள் வலிமை யிருக்கின்றது. உங்களிடத்திலுள்ள கடவுள்தன்மையைத் தெரிந்துகொள்ள நீங்கள் ஆகாயத்தை நோக்கிப் பார்க்கவேண்டுவதில்லை. உங்கள் உள்ளத்தில் அத் தெய்வத்தன்மை இருக்கின்றது. ஆகாயத்திலாவது அல்லது உங்களுக்குத் தெரியாதவொரு இடத்திலாவது கடவுளிருப்பதாக நீங்கள் நினைக்கவேண்டா. உங்கள் உள்ளத்தைத் தேடிப்பார்த்தால் அங்குக் கடவுட்டன்மையைக் காணப்பெறுவீர்கள்.

கிறிஸ்தவ அப்பாஸ்டலர்களில் ஒருவர் நூறுவயது உடையவர். அவரை மற்ற அபாஸ்டலர் மக்கட் கூட்டம் கூடுகின்ற விடத்திற்கு அழைத்துச் செல்வார்கள். அவர் வயோதிகர். அவரால் பேசுவதற்கு இயலாது. ஆனால், வாய்திறவாது தமது அன்பை மக்களிடத்தில் பரப்பிவந்தார். அவரது அன்பு மக்களிடை சென்று மக்கள் தம் மனங்களைத் தூய்மைப்படுத்தியது. 'நான் வயதுசென்றவள்,' "உலக மக்களுக்கு இனி எப்படி உதவிசெய்யமுடியும்,' என்று எனக்குள்ளே சொல்லிக் கொள்வதுண்டு. அப்பொழுது நானே அதற்குமறுமொழியாக, 'என்னுள்ளே கடவுள் இருக்கின்றான். எனவே நான் கடவுள், நானே கடவுளானபடியினால், எல்லாரையும் எல்லாவற்றையும் கடவுளாக்க முடியும்' என்று சொல்லிக்கொள்வேன். எனது இவ்வுரையைக் கனவிற்பயிலும் சொற்கள் என்று எண்ணாது உண்மையெனக் கொள்ளுங்கள்.

நாம் ஒருவருக்கொருவர் பொதுநம்பிக்கைகளால் மாத்திரமன்றி பொது உண்மைகளாலும் இணைக்கப்பட்டிருக்கின்றோம். நீங்கள் என்ன நம்புன்கிறீர்கள் என்பது ஒரு பொருட்டன்று; நீங்கள் எப்படி வாழ்கின்றீர்கள் என்பதே நோக்குதற்குரியது. நீங்கள்பேசுவதினும் வாழ்வதே பயன்தருவதாகும். உங்கள் உள்ளுக்குள்ளே மறைந்துகிடக்கும் கடவுள்தன்மையால் விளங்க முயலுங்கள். உங்களைச் சுற்றிலுமுள்ள மக்களிடத்தில் அன்பைச் செலுத்துங்கள். உங்கள் உதவியைப்பெறுவதற்கு யாராவது ஒருவர் காத்துக்கொண்டிருப்பார். நீங்கள் செல்லும் பாதையில் தன் காலில் நிற்க வலியின்றி ஒரு குழந்தை கீழே விழுந்துகிடக்கலாம். அப்பொழுது அக்குழந்தையை யாராவது தூக்கிவிடுவார்கள் என்றுசெல்லாதீர். நீங்களேபோய்த் தூக்கிவிடுங்கள். அப்படிச் செய்வீர்களானால் வேறு ஒருவர் மற்றொரு குழந்தையை தூக்கிவிடுவார். இவ்வாறு இந் நற்பழக்கம் உலகில் பரவும்.

ஆ. ஸி. கஸ்தூரிரங்கய்யர் B.A., L.T.,
இயற்றிய
: : இராமாயண வினா விடை : :
இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்கு அச்சிடப்பட்டு 380 பக்கங்கள் கொண்டது. எழு காண்டங்களும், அரிய நீதிகளும் தெளிவுவாய்ந்த அனுபந்தங்களும் அடங்கியது. விலை ரூபா 1 8 0
பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையாரப்பேட்டை
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்

— தேகபலம் —
:: புத்திர சந்தானம் ::
இவைகளையடைய எங்கள் ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை உபயோகியுங்கள்.
சென்ற 51 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று வருகின்றன.
மேலும் தேக அசதி, மலச் சிக்கல், ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கண்டிக்கின்றன.
32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1.
5 டப்பிகள் ரூ. 4.
இனாம்! காம சாஸ்திரம் இனாம்!
கேட்போருக்கு இனாமாகவும், தபாற்செல வில்லாமலும் அனுப்பப்படும்.
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— சரஸ்வதி பவுண்டரி —

தந்திவிலாசம்:—காஸ்டிங்.] [Established 1904] [டெலிபோன் நே:—3002

96. புளியந் தோப்பு ஹைரோட், பெரம்பூர் பாரக்ஸ், சென்னை.

எம்மிடம் தேர்ச்சிபெற்ற இந்தியத் தொழிலாளர்களால் தயாரிக்கப்பட்ட ரங்கூன் & அமரிக்கன் டைப், ரைஸ்ஷெல்லர்களும், பாலிஷிங் கோன்களும், மூன்று தினுசாயுள்ள சவரன் டை பிரஸுகளும், வெள்ளிப் பாத்திரங்கள் செய்யும் பிரஸுகளும், பொன் வெள்ளித் தகட்டாலைகளும், கரும்பாலைகளில் கல்கத்தா சைஸ்களும், சாதா மூன்று கால் கரும்பாலைகளும், தண்டவாளச் சுழல்படிகளும், தண்டவாளத் தூண்களும், பலவிதமானத் தண்டவாளக் கிராதிகளும், ஆயில் காஸ் மோட்டார் எஞ்சின்களுக்குத் தேவையாயுள்ள ஸிலிண்டர், வாட்டர் ஜாகட்டுக்களும், மற்றத் தனிச் சாமான்களும், எங்கல்பர்க் டைப் நெம்பர் 1, 2, 3, 4, 7 & 8 பால்பேரிங் & சாதா ரைஸ் ஹல்லர்களும், அவைகளுக்குவேண்டிய தனிச் சாமான்களும், தண்டவாள சாதா புல்லிகளும், படபாதிப் புல்லிகளும், கிடைக்கும். ஆயில் காஸ் ஸ்டீம் எஞ்சின்களின் லைனரை ரிபேர் செய்தும் புதிய பிஸ்டன் போட்டும் கொடுக்கப்படும்.



முனிஸிபாலிடிகளுக்குத் தேவையாயுள்ள எலக்ட்ரிக் விளக்குப் போஸ்டுகளும், சாதாரண 1, 2, 3, 4, 5 கிளையுள்ள லாந்தர் போஸ்டுகளும், வாராவதிக்குப் போடக்கூடிய லாந்தர்போஸ்டுகளும் பிராக்கட்டுக்களும், மேனேல் கவர்களும், திம்மிசுகளும், குப்பைவண்டி இன்லெட் அவுட்லெட் வால்வுசெட்டுகளும், பைப்பு பிட்டிங்கிற்கு வேண்டிய தண்டவாளக் குழாய்களும், கப்பிளிங் பைப் டீ, பிரான்ச் ரெடியூஸர்களும், தோட்டத்தில் போடக்கூடிய தண்டவாளப் பெஞ்சு கால்களும், பள்ளிக்கூடத்துக்கு வேண்டிய சாதா மடிப்புப் பெஞ்சுகளும் கிடைக்கும்.

மைல்ஸ்டீல் தகட்டினுல் செய்த பாயிலர் சிம்னிகள், டாங்குகள், நெல் அவிக்கும் பாய்லர்கள், டிரஸ்கள், வாராவதிகள் இன்னும் பலவிதமான ரிவிட்டு வேலைகள் யாவும் நேர்த்தியாய்த் தயாரித்துக் கொடுக்கின்றோம்.

சார்ஜிகள் மிகவும் சரசம். குறித்த காலங் தவறுவதில்லை. கேட்லாக்கிற்கு எழுதவும்.

ஆங்கில ஆசான்

எமதுலேடி டிரேட் மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

60 நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடிய அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிகப் பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துகளில் அச்சியற்றி யுள்ளோம். இதுவரை 53100 புத்தகங்கள்செலவாயுளது இதன் மேன்மைக் கடையாளம். இப் பத்தாம் பதிப்பு ஆங்கில வாசானைப்போல், வேறு எப்புத்தகமும் சீக்கிரத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ள உதவாது. நம் முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர் கூட 10-வது பதிப்பை வாங்கவேண்டும். இதில் 1 அணு முதல் 3000 ரூபாய் வரைச் சம்பளம் வாடகைக் கணக்குளது. 800 பக்கங்களுக்கு மேற்கொண்ட அழகிய சிமைக் கலிக்கோ பயிண்டுடையது.

விலை ரூ 2.

தி. இராஜகோபால் முதலியார்,
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

Head Office:
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Policies Issued in 1931 for over ...	... Rs. 1,32,33,000
Showing an increase over the New Business figure for 1930 of ...	... 16.54 %
Claims paid up to end of 1931 over ...	... Rs. 90,00,000
Invested Funds amount to over	Rs. 1,75,00,000

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)